# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

*காலேப் யோசுவா*
☎ 044 - 26490183. Cell :9444701953

*4/130, காந்தி தெரு, சென்னீர்குப்பம்,*
*பூந்தமல்லி, சென்னை - 600 056.*

## *மரித்த தீர்க்கதரிசியாகிய சாமுவேல்*
## *மரணத்தை எதிர்நோக்கிக்கொண்டிருந்த இராஜாவாகிய சவுலோடு சம்பாஷிக்க முடிந்தது (1 சாமு. 28 அதி)*

1. பிரியமானவர்களே, அந்நாட்களில் கர்த்தரால் தெரிந்துக்கொள்ளப்பட்ட பூமியில் உள்ள பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்தை மறுபடியும் இந்நாட்களில் இப்பூமியில் ஆனாலும் உன்னதத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாய் இருக்கிற பரிசுத்தவான்களுக்கும், கர்த்தருடைய வேதத்தை தங்கள் இருதயத்தில் பதித்திருக்கிற ஜனங்களுக்கும் எழுதி உணர்த்த என் தேவன் என் மனதிலே ஒரு எண்ணத்தை உண்டாக்கினார். அதற்காக அவரை ஸ்தோத்தரிக்கிறேன்.
நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும், சமாதானமும் உண்டாவதாக.

2. சமீபகாலத்தில் **ஜாமக்காரன்** என்ற பத்திரிக்கையில் மகாவேசியின் குமாரத்திகளாகிய ஸ்பாதன சபைகளில் ஒன்றை சார்ந்த அதன் ஆசிரியர் டாக்டர் புஷ்பராஜ் அவர்கள் எல்லா கிறிஸ்தவர்களும் அறிந்துக் கொள்ளவேண்டிய ஒரு முக்கியமான செய்தி என தன்னில் உள்ள ஆவியினால் உணர்த்தப்பட்டு அதை வெளியிட்டார். அந்த முக்கியமான செய்தி டாக்டர் M.S. வசந்தகுமார் (லண்டன்) அவர்கள் எழுதிய **மரித்தோரின் ஆவிகளினால் மனிதரை ஆசீர்வதிக்க முடியுமா?** என்ற ஒரு ஆராய்ச்சி கட்டுரையாகும்.

3. இந்த ஆராய்ச்சி கட்டுரையில் உள்ள ஒரு சில பகுதிகள் நான் ஒரு விசை பரிசுத்தவான்களுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்தை எழுதுவதற்கு தூண்டுகோலாக இருந்தது. நான் இந்த ஆராய்ச்சி கட்டுரையின் **இரண்டாம் அத்தியாத்தில் உள்ள சர்சைக்குறிய பகுதிகளுக்கு சரியான பதில்கள், வேதாகம சம்பவங்களின் வியாக்கியானம், வேதாகம சத்தியத்தின் விளக்கம்** போன்ற பகுதிகள் பரத்திலிருந்து இறங்கிவந்த ஞானமாயிராமல் லௌகிக சம்பந்தமாக இருப்பதாக எனக்குள் உள்ள கிறிஸ்துவின் ஆவியினால் உணர்ந்தேன். ஆதலால் தான் இந்த ஆராய்ச்சி கட்டுரை குறித்து தேவஞான மன்னாவை உங்களுக்கு கொடுக்க என் பேனாவை ஆவியானவரின் வழிநடத்துதலின் படி எடுத்து எழுதலானேன். இதற்காக ஆத்தும நேசரின் பாதத்தில் அவ்வப்போது அமர்ந்திருந்து எழுதி முடித்தேன். இது இப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு மன்னாவாக உங்கள் கரங்களில் உள்ளது. கரங்களை உங்கள் வாய்க்கு நீட்டி மன்னாவை புசிப்பது , புசியாதிருப்பது உங்கள் சுயாதினம். நடுகிறவனாலும் ஒன்றும் இல்லை, நீர் பாய்ச்சுகிறவனாலும் ஒன்றும் இல்லை. விளையச் செய்கிற தேவனாலே எல்லாம் ஆகும் என வேதவாக்கியங்களில் நாம் வாசிக்கிறோம். ஆதலால் என்னால் ஒன்றுமில்லை. விளைய செய்கிற தேவனாலே எல்லாம் ஆகும். நான் நடுகிறவனாகவும், நீர் பாய்ச்சுகிறவனாகவும் இருக்கிறேன்.

4. இங்கு நான் உங்களுக்கு ஒரு விஷயத்தை எழுத விரும்புகிறேன். டாக்டர். M.S. வசந்தகுமார் அவர்களின் ஆராய்ச்சி கட்டுரை ஒன்றும் புதிதல்ல. நான் உங்களுக்கு பரிமாறும் ஆவிக்குரிய ஆகாரமும் ஒரு விசை பரிசுத்தவான்களுக்கு கொடுக்கபட்டது தான். நானும் எந்த ஒரு புதிய காரியத்தையும் உங்கள் முன் கொண்டு வரவில்லை. என்னிடம் முதல்முதலாக 1906 ல் பிரசுரிக்கப்பட்டு, 1970 ல் ஆறாவது முறையாக மறுபதிப்பு செய்யப்பட்ட ஆங்கில வேதாகமம் ஒன்று உண்டு. அதை **ஸ்கோபீல்ட் பைபிள்** என்பார்கள். இதுவும் Authorised King James Version தான். இது சவுலுக்கு சாமுவேலாக காட்சி அளித்தது சாத்தான் தான் என்ற ஒரு உபதேசமும், மாறாக அது உண்மையான / நிஜமான சாமுவேலின் ஆவிக்குரிய சரிரம் தான் என்று மற்றொரு உபதேசமும் உள்ளதாக கூறுகிறது. இதில் முந்திய உபதேசத்தை டாக்டர். M.S. வசந்தகுமார் அவர்கள் பற்றிக்கொண்டார்கள். அதை டாக்டர் புஷ்பராஜ் அவர்கள் ஆமோதிக்கிறார்கள். அவ்வளவுதான்.

5. பொதுவாக திருத்தும் என்ற உபதேசத்தில் உள்ள, சகல ஜாதிகளையும் போல நாங்களும் இருப்போம் என கூறும் ஸ்தாபன சபைகள் யாவும் சவுலிடம் இடைப்பட்டது சாத்தான் தான் என்று உபதேசிக்கிறது. ஏனென்றால் திருத்துவம் அதாவது தேவத்துவத்தில் திருத்துவம் என்ற உபதேசமே சாத்தானுடையது தானே. சாத்தான் தனக்கடுத்த உபதேசங்களை தன்னுடைய ஊழியக்காரர்களை கொண்டு உபதேசிப்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லையே!

6. ஆனால் ஒரே தேவன் உண்டு. தேவத்துவம் சரீரப் பிரகாரமாக கிறிஸ்துவுக்குள் பரிபூரணமாக வாசம் செய்கிறது. அவரில் தேவத்துவம் சரீரப் பிரகாரமாக மூன்றில் ஒரு பங்கு அல்ல, மாறாக தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம், நூறு சதவீதம் சரீரப் பிரகாரமாக கிறிஸ்துவுக்குள் வாசமாய் இருக்கிறது. அவரே ஒன்றான மெய்த்தேவன். மாமிசத்தில் வெளிப்பட்ட தேவன். அவருடைய நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்று விசுவாசிப்பவர்கள் சவுலோடு இடைப்பட்டது உண்மையான / நிஜமான சாமுவேலே. சாமுவேல் தன் ஆவிக்குரிய சரீரத்தில் அதாவது தியாப்பெனி சரீரத்தில் (மாம்சமும் இரத்தமும் இல்லாத சரீரத்தில்) வெளிப்பட்டார் என விசுவாசிக்கிறார்கள். ஏனென்றால் இவர்கள் தேவனால் பிறந்தவர்கள். தேவன் தமக்கடுத்த உபதேசங்களை தம்முடைய பிள்ளைகளுக்கு ஐந்து வகை ஊழியங்களை (எபே. 4 : 11 - 13) கொண்டு போஷிக்கிறார்.

7. ஆக , சவுலோடு இடைப்பட்டது சாத்தான் என்று திருத்துவ உபதேசத்தில் உள்ளவர்களும் மாறாக சவுலோடு இடைப்பட்டது உண்மையான / நிஜமான சாமுவேல், தன் ஆவிக்குரிய சரீரத்தில் என ஒரே தேவன் உண்டு, அவர் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என விசுவாசிப்பவர்கள் ஆகும். இந்த இருவகையான உபதேசங்களும் ஆதியிலிருந்து இருந்தே வருகிறது. இவைகள் ஒன்றும் புதிதானது அல்ல. ஆக இந்த ஆராய்ச்சி கட்டுரை ஒன்றும் புதிதானது அல்ல.

8. ஒருவன் பரிசுத்த ஆவியை பெற்றிருந்தால் மட்டுமே, அந்த அபிஷேகம் அவனை வேதவாக்கியங்களோடு இணைக்கும். நீங்கள் வேதவாக்கியங்களோடு ஒன்றுப்படுவது நீங்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளதை நிருப்பிக்கிறது. நீங்கள் பெற்றுள்ள டாக்டர் பட்டமும் , நீங்கள் இன்டர்நேஷனல் பிரசங்கியார் என்று அழைக்கப்படுவதும், நீங்கள் அந்நிய பாஷைகளை பேசுவதும், நீங்கள் தீர்க்கதரிசனம் உரைப்பதும் உங்களை வேத வாக்கியங்களோடு இணைக்கும், ஒன்றுபடுத்தும் என்று கூற முடியாது. நீங்கள் பரிசுத்த ஆவியை பெற்றிருந்தால், அது ஒன்றே உங்களை வேதவாக்கியங்களோடு இணைக்கும். மற்றவை எதுவும் இணைக்காது.

9. அடுத்து நீங்கள் அறிந்துக்கொள்ள வேண்டியது: வேதவாக்கியங்களை நீங்கள் ஆராய்ச்சி (Research) செய்யவே முடியாது, கூடாது. ஏனென்றால் வேதவாக்கியங்கள் யாவும் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது (1 தீமோ. 3 : 16) தேவஆவியினால் அருளப்பட்ட வேதவாக்கியங்களை ஆராய்ச்சி செய்ய வானத்திலாவது, பூமியிலாவது, பூமியின் கீழாவது உள்ளவர்களில் ஒருவனுக்கும் அறிவு கிடையாது, தகுதியும் கிடையாது, எவனும் பாத்திரவானும் கிடையாது. Research = to discuss, or establish the fact. வேதவாக்கியங்களை அது எழுதப்பட்டுள்ள பிரகாரமாகவே நீங்கள் விசுவாசிக்க வேண்டும். அதற்கு மிஞ்சியது சாத்தான்.

10. உதாரணமாக, இஸ்ரவேல் புத்திரர் பலத்த கையுடன் எகிப்திலிருந்து புறப்பட்டார்கள். பார்வோனின் மனம் வேறுபட்டது. இஸ்ரவேல் ஜனங்களை பின் தொடர்ந்தான். கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்காக யுத்தம் பண்ணினார். கர்த்தர் இராமுழுவதும் பலத்த கீழ் காற்றினால் சமுத்திரம் ஒதுங்கும்படி செய்து அதை வறண்டு போக பண்ணினார். ஜலம் பிளந்து பிரிந்து போயிற்று. இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்து போனார்கள். அவர்கள் வலது புறத்திலும், அவர்கள் இடது புறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நின்றது. எகிப்தியர் அவர்களை தொடர்ந்தார்கள். கர்த்தர் அவர்களை கடலின் நடுவிலே கவிழ்த்துப் போட்டார். எகிப்தியரில் ஒருவனும் தப்பவில்லை. (யாத். 14 அதி)

11. இப்போது கவனியுங்கள். சமுத்திரத்தின் ஜலம் எப்படி குவிந்து நின்றது? வெள்ளம் எப்படி குவியலாக நிமிர்ந்து நிற்க முடிந்தது? ஆழமான ஜலம் நடுக்கடலிலே எப்படி உறைந்துப்போனது என்று ஆராய்ச்சி (Research) செய்தவர்கள் யாவரும் அவமாய்ப்போனார்கள். வேதவாக்கியங்களை அது அருளப்பட்ட பிரகாரமான நித்திய ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசிக்கிறார்கள். தங்கள் ஆத்துமாவை காத்துக் கொள்ளுகிறார்கள். ஆதலால் 1 சாமு. 28 அதிகாரத்தை அது எழுதப்பட்ட பிரகாரமாகவே நாம் விசுவாசிக்க வேண்டும். அதை நாம் ஆராய்ச்சி செய்யக்கூடாது. மேலும் அதோடு நாம் ஒன்றையும் கூட்டவும், குறைக்கவும் கூடாது.

12. அதே வேளையில் நாம் வேதவாக்கியங்களை ஆராய்ந்து (Search) பார்க்கலாம். Search என்றால் தேடு என்று அர்த்தம். கர்த்தருடைய புத்தகத்திலே தேடி வாசியுங்கள் அவைகளில் ஒன்றும் குறையாது என ஏசா. 34 : 16 ல் வாசிக்கிறோம். இது மேன்மையான காரியம். பாருங்கள் அன்று பெரோயா பட்டிணத்தார் மனோவாஞ்சையாய் கர்த்தருடைய வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படி இருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து (Search) பார்த்தார்கள். (அப். 17 : 11) அதாவது ஒரு நீதிபதி ஒரு வழக்கை விசாரித்து அதன் உண்மையை கண்டு அறிவது போன்றது ஆகும்.

13. ஆக வேதவாக்கியங்கள் நம்மை அவைகளை ஆராய்ந்து பாருங்கள் என்று கூறுகிறதேயன்றி (Search the scripture) அதை ஆராய்ச்சி (Research) செய்யுங்கள் என்று எங்கும் கூறவில்லை. (யோ. 5 : 39) ஆராய்ச்சி (Research) என்ற சொல்லே வேதவாக்கியங்களில் எங்கும் கிடையாது. அல்லேலூயா !

14. காரியங்கள் இப்படியிருக்க டாக்டர். M.S. வசந்தகுமார் அவர்கள் ஆராய்ச்சி வேதவாக்கியங்களின் அடிப்படையில் இல்லை. ஆதலால் அது ஒன்றுக்கும் உதவாது. இவர் போன்று அதிகம் படித்து B. Th., M.Th.,B.D., D.D., Th.D., Th.M., Ph.D., போன்ற பல பட்டங்கள் பெற்றவர்கள் உண்டு. இவர்களால் தேவனுக்கு எந்த விதமான பிரயோஜனமும் கிடையாது. ஏனென்றால் இப்படிபட்டவர்களை தேவன் எடுத்து தம்முடைய பணிக்கு உபயோகித்தாக வேதவாக்கியங்களில் எங்கும் ஆதாரம் இல்லை. கர்த்தரால் எடுத்து உபயோகப்படுத்தபட்டவர்கள் படிப்பறியாதவர்களும், பேதைமை உள்ளவர்களுமாகவே இருந்தார்கள். (அப். 4 : 13). பவுல் தன் படிப்பையும், பட்டத்தையும், தன் அந்தஸ்தையும், குப்பை என்று எண்ணிய பிறகுதான் கர்த்தர் அவனை எடுத்து பயன்படுத்தினார். ஞானிகளினால், கல்விமான்களினால் தேவனுடைய சரீரமாகிய சபைக்கோ, தேவனுடைய சிறுமந்தைக்கோ எந்தவிதமான பிரயோஜமும் இல்லை.

15. அடுத்து தேவன் தமக்கடுத்த காரியங்களை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து பாலகருக்கு வெளிப்படுத்துகிறார். (மத். 11 : 25) பாருங்கள் பவுல் தான் பெற்ற சுவிஷேசம் மனுஷருடைய யோசனையின் படியானதல்ல, அவன் அதை எந்த ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை. மாறாக அதை இயேசு கிறிஸ்துவே அவனுக்கு வெளிப்படுத்தினார் என்கிறான். (கலா. 1 : 11,12) இது தான் நமக்கு தேவை. **வெளிப்பாடு.** மத். 28 : 19ன் வெளிப்பாட்டை பெற்றவன் தான் அப். 2 : 38 ஐ அங்கீகரிப்பான். மற்றபடி மத். 28 : 19

எனக் கூறி க்கூறியே ஆத்தும இரட்சிப்பு இல்லாமல் அக்கினிக் கடலில் விழுவான்.

16. ஆக ஒருவன் தான் படித்த கல்வியைக் கொண்டு, தான் பெற்ற ஞானத்தை கொண்டு தன்னுடைய பெயருக்கு முன், பின் போடும் பட்டங்களை கொண்டு வேதவாக்கியங்களை அறிந்துக்கொள்ள, புரிந்துக்கொள்ள முடியாது. தேவன் தமக்கடுத்த காரியங்களை குறித்து ஒருவனுக்கு அதை வெளிப்படுத்த வேண்டும். வேதவாக்கியங்களை அறிந்துக்கொள்ளும் படி ஒருவனுடைய மனதை கர்த்தர் திறக்கவேண்டும். (லூக். 24 : 45) பாருங்கள் வார்த்தையின் கருத்தை சீஷர்கள் அறிந்துக்கொள்ள முடியவில்லை. அது அவர்களுக்கு தோன்றாமல் மறைபொருளாய் இருந்தது. (லூக். 9:45) தேவபக்திகேதுவான சத்தியத்தை அறிகிற அறிவும், விசுவாசமும் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களுக்கே உண்டாகும். (தீத். 1 : 3) வேதவாக்கியங்களை கையாளுவது ஞானிகளுக்கும். கல்விமான்களுக்கும் அடுத்த காரியம் அல்ல.

17. அப்படியானால் வேதவாக்கியங்களுக்கடுத்த ஆராய்ச்சி கட்டுரையினால் யாருக்கு பயன்? படித்து, பட்டங்கள் பல பெற்ற ஞானிகளின், கல்விமான்களின் ஆராய்ச்சி கட்டுரைகள் **தாய் சபை** என்ற நாமம் தரிக்கப்பட்டுள்ள, ஏழுமலைகளின் மேல் உட்கார்ந்திருக்கிற (வெளி. 17:5,7) அந்த மகா வேசிக்கும் அவளுடைய குமாரத்திகளாகிய நம் மத்தியில் உள்ள திருத்துவ ஸ்தாபன சபைகளுக்கு மாத்திரமே பிரயோஜனமாக இருக்கும். இவர்கள் வேதவாக்கியங்களில் இல்லாத உபதேசங்களை போதிப்பவர்களும், பின்பற்றுகிறவர்களுமாய் இருக்கிறார்கள்

அ. இவர்கள் விசுவாசிக்கும் திருத்துவம் வேதவாக்கியங்களில் எங்கும் காணப்படாத ஒரு உபதேசம். ஆதலால் இது பிசாசின் உபதேசம்.

ஆ. பிதாகுமாரன் பரிசுத்த ஆவி எனக்கூறி இவர்கள் தான் ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள். வேதவாக்கியங்களில் அப்படி யாராவது, எங்கேயாவது ஞானஸ்நானம் கொடுத்ததாக ஆதாரங்கள் இல்லை. அப்போஸ்தலர் நடபடிகள் முதல் வெளிப்படுத்தின விஷேசம் வரை நீங்கள் வாசித்து பாருங்கள். அவ்வாறாக ஞானஸ்நானம் கொடுத்தவர்களும், பெற்றவர்களும் எங்கும் கிடையாது.

இ. இவர்கள்தான் பகல் நேரங்களின் கர்த்தருடைய இராப்போஜன பந்தியை ஆசரிக்கிறார்கள். அப்போஸ்தலர்கள் இரவு நேரங்களில் ஆசரித்தார்கள். அதற்கு ஒரு நோக்கம் உண்டு. இஸ்ரவேல் ஜனங்கள் பஸ்காவை மாலையில் அடித்து இராவில் புசிக்க கட்டளை பெற்றார்கள் (யாத். 12 : 6, 8) நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்துவும் மாலையிலே கல்வாரியில் அடிக்கப்பட்டார். ஆதலால் நாம் இராபோஜனத்தை இரவில் புசிக்க வேண்டும். இராபோஜனம் என்றாலே அது இரவு போஜனம் தானே. அப்படியானால் அதை பகல்போஜனமாக்கும் இவர்கள் யார்? அப். 2 :40 ல் கூறப்பட்டுள்ள மாறுபாடுள்ள சந்ததியே.

ஈ. கிறிஸ்துமஸ், ஈஸ்டர், போன்ற பண்டிகைகளை பரிசுத்தவான்கள் யாரும் கொண்டாடியதாக வேதத்தில் ஆதாரம் இல்லை. லெந்து நாட்கள் என கூறி விசேஷித்த நாட்களை அவர்கள் ஆசரித்ததாகவும் ஆதாரங்கள் இல்லை. இவை அனைத்தையும் இந்த வேசி மார்க்கத்தாரே தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொண்டு ஆசரித்து வருகிறார்கள். தேவனுடைய நாமத்தை தூஷிக்கிறார்கள்.

உ. நமது கரங்களில் உள்ள பரிசுத்த வேதாகமத்தில் எங்கும் இவர்கள் அறிக்கையிடும் அதநாஷியஸ் விசுவாச பிரமாணம் என்ற ஒன்று இல்லை. லித்தானியா என்ற பொதுவான பிரார்த்தனையை கர்த்தர் தம்முடைய சீஷர்களுக்கு சொல்லிக் கொடுக்கவும் இல்லை. அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணம் என்ற ஒரு பிரமாணத்தை அப்போஸ்தலர்கள் நமக்கு கற்ப்பிக்கவும் இல்லை. இவைகள் யாவும் பரத்திலிருந்து இறங்கி வராத லௌகிய ஞானமே.திருத்துவ ஞானமே. பிசாசின் ஞானமே.

ஊ. கிறிஸ்து அப்போஸ்தலர்களாக எந்த ஒரு பெண்ணையும் நியமிக்கவில்லை. பெண்கள் பிரசங்கம் செய்ததாக வேதத்தில் எங்கும் ஆதாரம் இல்லை. ஏனென்றால் அவர்கள் ஆண்கள் மீது அதிகாரம் செலுத்தக் கூடாது. (1 தீமோ.2 : 12) தேவனுடைய வார்த்தை எங்கோ அங்கு அதிகாரம் உண்டு. (பிர. 8 : 4) பெண் பிரசங்கிகளுக்கு இந்த வேசிமார்க்கத்தில் தான் மதிப்பும் மரியாதையும். தேவனுடைய சரீரமாகிய சபையில் இவர்களை கண்டு கொள்வார் யாரும் இல்லை.

எ. கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக் கொண்டு பரிசுத்த அலங்காரத்தோடு கர்த்தரை தொழுதுக்கொள்ள வராமல் பெண்கள் மயிரை பின்னி, பொன் ஆபரணங்களை அணிந்து, பட்டு புடவைகளை அணிந்து ஆண்களை கவரும் வகையில் தங்களை அலங்கரித்து பகட்டாக ஆலயத்திற்கு வருவது இந்த வேசி மார்க்கத்தை சேர்ந்தவர்களே.

18. இவ்வாறாக வேதவாக்கியங்களில் எழுதப்படாத, காணப்படாத, கட்டளையிடப்படாத, போதிக்கப்படாத உபதேசங்களை போதித்து வருவது இந்த வேசிமார்க்கத்தாரே. கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொண்டு, தேவனுடைய வார்த்தைக்கு மாறாக இவர்கள் நடந்து வருவதால் வேசி மார்க்கத்தார் என அழைக்கப்படுகிறார்கள்.

19. வேதவாக்கியங்களில் காணப்படும் ஒரே தேவன் (அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து) ஒரே ஞானஸ்நானம் (அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால்) போன்ற மூல உபதேசங்கள் கொரிந்து, கலாத்தியா, எபேசு, பிலிப்பு, கொலோசே, தெசலோனிக்கேயா, போன்ற பட்டிணங்களில் உள்ள சபைகளில் காணப்பட்டன. அவர்கள் யாவரும் ஒரே தேவன் உண்டு, அவர் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. ஒரே ஞானஸ்நானம். அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் என்றே விசுவாசித்தார்கள். ஆனால் மேற்கூறிய மகாவேசியையும் அவளுடைய குமாரத்திகளையும் கவனியுங்கள். இவள் தேவன் திருத்துவத்தில் என்கிறாள். ஞானஸ்நானமும் திருத்துவத்தில் என்கிறாள். இவளுடைய உபதேசங்கள் எதுவும் வேதவாக்கியங்களில் காணப்படாத ஒன்றும், மனுஷர்களுடைய கற்பனையும், பாரம்பரியங்களுமாகவே இருக்கிறது.

20. மகாவேசியிடமும், அவளுடைய குமாரத்திகளிடமும் ஐக்கியம் வைத்துள்ள இந்த டாக்டர் G. புஷ்பராஜ் அவர்களுக்கும், வேதவாக்கியங்களில் காணப்படும் சத்தியத்திற்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது.

அவருடைய ஐக்கியம் அவர் யார் என்பதை எடுத்துக்காட்டுகிறது. இவருடைய உபதேசங்கள் யாவும் வேதவாக்கியங்களில் பெரும்பாலும் காணப்படாதவைகளாகவே இருக்கிறது. டாக்டர். M.S. வசந்தகுமார் அவர்களை குறித்து நான் ஒன்றும் அறியேன். ஆனாலும் அவர்களுடைய **சாமுவேலின் தோற்றத்தில் பிசாசின் ஆவி** என்ற உபதேசம் பேய்த்தனத்துக்கடுத்தது என்பதை மாத்திரம் அறிவேன்.

21. இப்பொழுது டாக்டர். M.S. வசந்தகுமார் அவர்களின் ஆராய்ச்சி கட்டுரையில் நான் தெரிந்துக்கொண்ட பகுதிகளை உங்கள் உடன் தியானத்திற்காக எழுதி அவைகளுக்கு பின் வேதவாக்கியங்களை கொண்டு பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்தை எழுதுகிறேன்.

## இரண்டாம் அத்தியாயம்
## சர்ச்சைக்குரிய பகுதிகளுக்கு சரியான பதில்கள்

22. மரித்தோரின் ஆவிகளினால் மனிதர்களோடு தொடர்புகொண்டு அவர்களுக்கு ஆலோசனையளிக்க முடியும் என்னும் தவறான உபதேசத்திற்கு ஆதாரமாகச் சுட்டிக்காட்டப்படும் வேதபகுதி 1 சாமுவேல் 28 : 3-25 ஆகும். இவ்வசனங்களில், இஸ்ரவேல் ராட்சியத்தின் முதலாவது அரசனான சவுல் என்பவனோடு மரித்துப்போன தீர்க்கதரிசியாகிய சாமுவேலின் ஆவி பேசியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் மரித்தோரின் ஆவிகளினால் உயிரோடிருக்கும் மனிதருக்கு ஆவிக்குரிய ஆலோசனையும், வழிநடத்துதலும் கொடுக்கமுடியும் என்று சிலர் வாதிடுகின்றனர். மரித்தோரின் ஆவிகளினால் மறுபடியும் இவ்வுலகத்திற்கு வரமுடியாது என்னும் வேதாகமப் போதனையை முரண்படுத்தும் விதத்தில் இச்சம்பவம் இருப்பதாகப் பலர் எண்ணுவது வழக்கம். வேதாகமத்தில் இதற்கு ஒப்பான அல்லது இதைப்போன்ற வேறுசம்பவங்கள் எதுவும் இல்லை. மேலும் இது தெளிவற்ற ஒரு பகுதியாக வாசிப்பவருக்குப் பல குழப்பங்களை ஏற்படுத்தும் விதத்தில் உள்ளது. உதாரணத்திற்கு, தன்னிடம் வந்திருப்பது சவுல் என்பதை அஞ்சனம் பார்க்கும் பெண் எப்படி அறிந்துக்கொண்டாள் என்பது இவ்வசனங்களில் சரியான விதத்தில் குறிப்பிடப்படவில்லை. அதேபோல, அஞ்சனம் பார்க்கும் பெண் உண்மையிலேயே மரித்தோரின் ஆவிகளுடன் தொடர்பு கொண்டாளா? என்பதையும் இச்சம்பவம் அறியத்தரவில்லை. இதனால் அச்சம்பவம் கிறிஸ்தவ உலகில் அதிக சர்சைக்குரிய ஒரு பகுதியாக உள்ளது.

23. எனவே மரித்தோரின் ஆவிகளினால் மனிதரை ஆசீர்வதிக்க முடியுமா என்பதை அறிந்து கொள்வதற்கு இச்சம்பவத்தை இவ்வாத்தியாயத்தில் ஆராய்ந்துப் பார்ப்போம். இதற்கு வேதாகம சம்பவங்களை வியாக்கியானம் செய்யவேண்டிய முறையை நாம் முதலில் அறிந்திருக்கவேண்டியது மிக அவசியம்.

**வேதாகம சம்பவங்களின் வியாக்கியானம் :**

24. வேதாகமத்திலுள்ள சம்பவங்களை, வேதாகம உபதேசங்களை அடிப்படையாகக் கொண்டே வியாக்கியனம் செய்யவெண்டும் என்பதை நாம் முதலில் அறிந்திருக்கவேண்டும். இந்நூலில் முதலாம் அத்தியாத்தில் நாம் பார்த்த விதமாக, மரித்தோரின் ஆவிகள் மறுபடியும் இவ்வுலகத்திற்கு வருவதில்லை என்றும், பிசாசின் ஆவிகளே இவ்வுலகில் உலாவுகின்றன என்றும், இவைகளே மரிதோரைப்போல காட்சியளிக்கின்றன என்றும் வேதாகமம் கூறுவதனால், மரித்த சாமுவேலின் ஆவி சவுலிடம் வந்திருக்க முடியாது. உண்மையில் சாமுவேலைப்போல தோற்றமளித்த பிசாசின் ஆவியே சவுலோடு பேசியது. பிசாசு ஒளியின் தூதனுடைய வேஷம் தரித்து வருவதாக வேதாகமம் கூறுவதனால் (2கொரி 11 : 14) அவனால் மரித்த மனிதர்களைப்போலத் தோற்றமளிக்கவும், மரித்தவர்களின் ஆவிகள் பேசுவது போல பேசவும் முடியும். மேலும், நாம் ஏற்கனவே முதலாம் அத்தியாயத்தில் பார்த்தப்படி 1 சாமுவேல் 28 : 7 ல் "அஞ்சனம் பார்க்கும் ஸ்திரீ என்பது மூலமொழியில் " குறிசொல்லும் பிசாசையுடைய பெண்" என்றே உள்ளது. இப்பெண் பிசாசுகளுடன் தொடர்புகொள்ளகூடியவளாக இருந்தாளே தவிர, மரித்தோரின் ஆவிகளுடன் தொடர்புக்கொள்ளகூடிய ஆற்றலும், தகுதியும் இவளுக்கு இருக்கவில்லை. இதனால் பிசாசின் ஆவியே இப்பெண்ணுடைய அஞ்சனம் பார்க்கும் செயலின் மூலம் சாமுவேலின் தோற்றத்தில் வந்துள்ளது. இதை அறியாத சவுல், உண்மையிலேயே மரித்த சாமுவேலின் ஆவி வந்துள்ளதாக எண்ணினான். மேலும் அஞ்சனம் பார்க்கும் பெண் கொண்டு வந்த ஆவியை சவுல் தன் கண்களினால் பார்க்கவில்லை. அப்பெண் கூறியவற்றை ஆதாரமாகக் கொண்டே வந்திருப்பது சாமுவேலின் ஆவி என்று அவன் எண்ணினான் (1 சாமு 28 : 13-41) அவன் ஆவி பேசியதை மாத்திமே கேட்டான். ஆவியை நேரடியாகக் காணவில்லை. அதுபோல சவுல் ஆவியோடு நேரடியாகப் பேசவுமில்லை. அஞ்சனம் பார்க்கும் பெண்ணூடாகவே பேசினான். ஏனெனில் அஞ்சனம் பார்ப்பவர்கள் கொண்டுவரும் ஆவிகளுடன் மனிதரால் நேரடியாகப் பேசமுடியாது. இதனால் சவுல் பிசாசின் ஆவியுடன் பேசும்போது சாமுவேலிடம் பேசுவாதாகவே நினைத்துப் பேசினான். இதைப்பற்றி 12ம் 14ம் வசனங்களில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இராஜா அவளைப் பார்த்து : நீ பயப்படாதே, நீ காண்கிறது என்ன என்று கேட்டான். அதற்கு அந்த ஸ்திரீ : தேவர்கள் பூமிக்குள்ளிருந்து ஏறி வருகிறதைக் காண்கிறேன் என்று சவுலுக்குச் சொன்னாள். அவருடைய ரூபம் என்ன என்று அவளைக் கேட்டான். அதற்கு அவள் : சால்வையைப் போர்த்துக்கொண்டிருக்கிற ஒரு முதிர்ந்த வயதான மனுஷன் எழும்பி வருகிறான் என்றாள். அதினாலே சவுல் அவன் சாமுவேல் என்று அறிந்துக்கொண்டு, தரை மட்டும் முகங்குனிந்து வணங்கினான் (1 சாமு 28 : 13-14)

25. "நீ காண்கிறது என்ன?" என்னும் கேள்விக்கு, "தேவர்கள் பூமிக்குள்ளிருந்து ஏறி வருகிறார்கள்" என்றும், "அவருடைய ரூபம் என்ன?" என்னும் கேள்விக்கு, சால்லையைப் போர்த்துக் கொண்டிருக்கிற ஒரு முதிர்ந்த வயதான மனுஷன்" என்றும் கொடுக்கப்பட்ட பதிலை அடிப்படையாகக் கொண்டே சாமுவேலின் ஆவி வந்துள்ளது என்று எண்ணி, அதனோடு சவுல் பேசினான். இதனால் சவுலோடு சென்ற இருவருக்கும் (1 சாமு 28 : 8) அவன் சாமுவேலோடு பேசுவதாகவே தென்பட்டது . இதனாலேயே 1 சாமுவேல் 28 ம் அதிகாரத்தில் ஆவி பேசும் போது

சாமுவேல் பேசுவதாகக் குறிப்பிட்டுள்ளது.

26. 1 சாமுவேல் 28ம் அதிகாரத்தை வாசிக்கும் போது, மரித்துப்போன சாமுவேலே சவுலோடு பேசியதாக நமக்குத் தென்பட்டாலும், மரித்தோரின் ஆவிகள் மறுபடியும் இவ்வுலகத்திற்கு வருவதில்லை என்று வேதாகமம் கூறுவதனால், மரித்த சாமுவேலின் ஆவியினால் சவுலிடம் பேசியிருக்கமுடியாது. பழைய ஏற்பாட்டின் சரித்திரப் புத்தகங்கள், குறிப்பாக அரசர்களின் வாழ்க்கை வரலாற்றை அறியத்தரும் சாமுவேல், ராஜாக்கள், நாளாகமம் என்னும் புத்தகங்கள், ஏற்கனவே எழுதப்பட்டிருந்த சரித்திரக் குறிப்புகளையும், நூல்களையும் ஆதாரமாக்கொண்டு எழுதப்பட்டவைகளாகும். இதனால் தான், நாளாகமப் புத்தகத்தை எழுதியவர், தான் உபயோகித்த சரித்திரப் புத்தகங்களின் விபரங்களைப் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். உதாரணத்திற்கு தாவீதின் கால சரித்திரத்தை எழுதிமுடிக்கும்போது, தாவீதைப் பற்றிய முழுமையான சரித்திரம் எப்புத்தகங்களில் உள்ளன என்பதை 1 நாளாகமம் 29 : 29-30 ல் அறியத்தந்துள்ளார். இதைப்போல, ஏனைய அரசர்களின் வாழ்க்கை வரலாறுகள் எங்கிருந்து எடுக்கப்பட்டன என்பதை அறியத்தரும் பல குறிப்புகள் நாளாகமப் புத்தகத்தில் உள்ளன (1 நாளா 9 : 1, 2நாளா 9:29, 12:15, 13:22, 16:11, 20:34, 32:32, 33:18-19, 35:27) சாமுவேலின் புத்தகத்தில் இத்தகைய ஒரு குறிப்பு மாத்திரமே உள்ளபோதிலும் (2 சாமு 1 : 18) இப்புத்தகத்தை எழுதியவர் ஏற்கனவே எழுதப்பட்ட சரித்திரக்குறிப்புகளை உபயோகித்துள்ளார் என்பதை மறுப்பதற்கில்லை.

27. தாவீதினுடைய மகன் சாலொமோனுடைய காலத்திற்கும் பின்பே சாமுவேலின் புத்தகம் எழுத்தபட்டுள்ளமையால், ஏறக்குறைய 100 வருஷத்திற்கும் முற்பட்ட சரித்திரத்தை ஏற்கனவே எழுதப்பட்ட சரித்திரப் புத்தகங்களை ஆதாரமாகக் கொண்டே எழுதியிக்க முடியும். வேதாகமம் தேவனுடைய ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட புத்தகம் என்பது உண்மை என்றாலும், சில சந்தர்ப்பங்களில் (குறிப்பாக சரித்திர புத்தகங்களில்) ஆவியின் ஏவுதல் ஏற்கனவே எழுதப்பட்ட புத்தகங்களை உபயோகிப்பதையும் உள்ளடக்கியுள்ளது. புதிய ஏற்பாட்டில் லூக்காவின் சுவிசேஷமும் இவ்வாறே எழுதப்பட்டுள்ளது. (லூக் 1:1-4) இதனால் சவுலும், அவனோடு அஞ்சனம் பார்க்கும் பெண்ணிடம் சென்ற இருவரும் மாத்திரம் அறிந்திருந்த விஷயம் அவர்களுடைய அனுபவத்தின்படி சாமுவேலின் ஆவி பேசியதாக எழுதப்பட்டிருந்த சரித்திரக்குறிப்பை ஆதாராமாகக் கொண்டே 1 சாமுவேல் 28ம் அதிகாரம் எழுதப்பட்டுள்ளது. இதனாலேயே சாமுவேலின் ஆவி சவுலுடன் பேசியதாக இவ்வதிகாரத்தில் குறிப்படப்பட்டுள்ளது. கானானிய மார்க்கத்தின் செல்வாக்கு காரணமாக, அஞ்சம் பார்ப்பவர்களினால் மரித்தோரின் ஆவிகளைக் கொண்டு வரமுடியும் என்று அக்காலத்தில் இஸ்ரவேல் மக்களும் நம்பியதினால், அவர்களுடைய சரித்திரக் குறிப்புகளிள் இச்சம்பவம் சாமுவேலின் ஆவி வந்ததாகவே எழுதப்பட்டுள்ளது. இத்தகைய குறிப்புகளை அதாரமாகக் கொண்டே 1 சாமுவேல் 28ம் அதிகாரம் எழுதப்பட்டுள்ளது. இதனால் வேதாகமத்தின் உபதேசப் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டே சரித்திரப்பகுதிகளை வியாக்கியானம் செய்யவேண்டும் என்பதை நாம் ஒரு போதும் மறக்கலாகாது.

**வேதாகம சத்தியத்தின் விளக்கம் :**

28. தற்காலத்தில் சில வேத ஆராய்ச்சியாளர்கள், தேவன் இந்த ஒரு சந்தர்ப்பதில் மாத்திரம், மரித்த சாமுவேலின் ஆவியை சவுலோடு பேசுவதற்காகக் கொண்டுவந்தார் என்று எண்ணுகின்றனர். எனினும், இது யூதமதப் போதகர்களின் விளக்கமாகவே உள்ளது. ஆனால் இது வேதாகமம் போதிக்கும் சத்தியமல்ல. மரிதோரிடம் ஆலோசனை கேட்கச்சென்ற சவுலுக்குத் தேவன் கோபத்தில் கொடுத்த பதிலாக இது இருப்பதாகவும் சிலர் கூறுகின்றனர். ஆனால் இந்த பாகத்தில் தேவன் சாமுவேலின் ஆவியைக் கொண்டுவந்தார் என்று 1 சாமுவேல் 28ம் அதிகாரம் கூறவில்லை. அஞ்சனம் பார்க்கும் பெண்ணுடைய செயலின் மூலமே சாமுவேலைப்போல தோற்றமளித்த ஒரு ஆவி வந்தது (1 சாமு 28:11-12) மேலும் தேவன் சாமுவேலின் ஆவியைக் கொண்டுவந்தார் என்று கூறுவது, தேவனுடைய தன்மையும், வேதாகம உபதேசத்தையும் முரண்படுத்தும் விளக்கமாகவே உள்ளது. தேவ வழிநடத்துதலைப் பெறுவதற்காக மரித்தவர்களிடம் விசாரிக்கும் முறையைத் தேவன் கடுமையாக கண்டித்துள்ளதோடு, இத்தகைய பழக்கத்தை முழுமையாக தடை செய்துள்ளார். "அஞ்சனம் பார்க்கிறவர்களை நாடவேண்டாம்" (லேவி 19 : 31) என்றும், "செத்தவர்களிடத்தில குறிகேட்கிறவர்கள் உங்களிடத்தில் இருக்கவேண்டாம்" (உபா 18 : 11) என்றும் கட்டளையிட்ட தேவன், இத்தகைய செயலுக்குத் தாம் எதிர்த்து நிற்பதாகத் தெரிவித்துள்ளதோடு (லேவி 20 : 6) இதில் ஈடுபடுகிறவர்களுக்கு மரணதண்டனை கொடுக்கப்படவேண்டும் என்றும் அறிவித்துள்ளார் (லேவி 19 : 27, யாத் 22 : 18), உண்மையில் அஞ்சனம் பார்ப்பதும் மரித்தவர்களிடத்தில் குறிகேட்பதும் தேவன் தடைசெய்துள்ள பாவங்களாகவே வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன (2 இராஜ 21 : 6,2 நாளா 33 : 6). எனவே தேவன் தாம் வெறுக்கும் பாவமான ஒரு செயலின் மூலம் சாமுவேலின் ஆவியைச் சவுலோடு பேசவைத்தார் என்று தர்க்கிப்பது, தேவனே தாம் வெறுக்கும் பாவத்தை செய்துள்ளதாகக் கூறுவதாகவே உள்ளது. தாம் தடை செய்த காரியத்தைத் தாமே செய்யும் அளவுக்குத் தேவன் முரண்பாடானவர் அல்ல என்பதை நாம் மறக்கலாகாது. எனினும், தேவன் சலகத்தையும் தம்முடைய கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருப்பதனால், சவுலுக்கு என்ன செய்தி அச்சமயம் கொடுக்கபடவேண்டுமோ, அதை மாத்திரம் பேசுவதற்குப் பிசாசுக்கு அனுமதி கொடுத்தார். தேவனுடைய அனுமதிக்கும் அப்பால் பிசாசினால் எதுவும் செய்யமுடியாது என்பதை யோபுவின் சரித்திரம் அறியத்தருகின்றது (யோபு 1 : 12) உண்மையில், இஸ்ரவேலைச் சபிக்கச் சென்ற பிலேயாமைத் தேவன் அவனுடைய விருப்பத்தின்படி பேசவிடாதிருந்ததைப்போலவே இங்கும் செய்துள்ளார்.

29. 1 சாமுவேல் 28 : 6 ல் "சவுல் கர்த்தரிடத்தில் விசாரிக்கும்போது கர்த்தர் அவனுக்குச் சொப்பனங்களினாலானது, ஊரீமினாலாவது, தீர்க்கதரிசிகளினாலாவது மறுவுத்தரவு அருளவில்லை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் "சொப்பனங்கள்", "ஊரீம்", "தீர்க்கதரிசிகள்" என்பனவே தேவன் அக்காலத்தில் மனிதர்களிடம் பேசுவதற்காக உபயோகித்து வந்த முறைகள் ஆகும். இவற்றினூடாகச் சவுலோடு பேச மறுத்த தேவன், அஞ்சனம்

பார்க்கிற ஒரு பெண்ணுடைய செயலின் மூலம் மரித்துப்போன சாமுவேலை எழும்பிவரச் செய்து அவனோடு பேசினார் என்று கூறுவது அர்த்தமற்றது. உண்மையிலேயே தேவன் சவுலோடு பேச விரும்பியிருந்தால், அவன் அவரிடத்தில் விசாரித்தபோது அவனுக்கு பதிலளித்திருப்பார். சவுல் தேவனுடைய வார்த்தையைத் தேடியபோது மவுனமாயிருந்த தேவன், அவர் தடைசெய்துள்ள காரியத்தைச் செய்திருந்தபோதும் அதன் மூலம் அவனோடு பேசினார் என்று கூறுவது அர்த்தமற்றது. மேலும், ஆரம்பத்தில் தேவனுடைய கட்டளையின்படி அஞ்சனம் பார்க்கிற சூனியக்காரர்களைக் கொன்றுபோட்ட சவுல் (1 சாமு 28 : 9) இப்பொழுது அஞ்சனம் பார்க்கும் ஒரு பெண்ணிடம் சென்றது, தான் தேவனுடைய கட்டளைக்கு விரோதமான ஒரு காரியத்தைச் அவன் செய்கிறான். ஆகவே இது அவன் செய்த ஒரு பாவமாகவே உள்ளது. எனவே, இத்தகைய காரியத்தில் தேவனுடைய செயல் இருப்பதாகக் கூறமுடியாது.

30. சாமுவேலின் ஆவியைத் தேவன் கொண்டு வந்தார் என்று கருதுபவர்களில் சிலர், இது அஞ்சனம் பார்க்கும் பெண்ணுடைய செயலின் மூலமாக வரவில்லை என்றும் வாதிடுகின்றனர். அதாவது அஞ்சனம் பார்க்கும் பெண் தன்னுடைய செயலை முடிப்பதற்கும் முன்பே தேவன் சாமுவேலின் ஆவியை கொண்டுவந்துவிட்டார் என்று இவர்கள் கருதுகின்றனர். இதனால் தான், சாமுவேலின் ஆவியைக் கண்டபோது அப்பெண் அதிர்ச்சியடைந்தாள் என்று இவர்கள் கூறுகின்றனர். பிசாசின் ஆவியையுடைய பெண், அவ்வாவியின் மூலம் செய்பவற்றைக்கண்டு அதிர்ச்சியடையவேண்டியதில்லை என்பது உண்மை என்றாலும், இவர்கள் கூறுவது போல் அப்பெண், தான் கொண்டுவந்த சாமுவேலைப்போல தோற்றமளித்த ஆவியைக்கண்டு அதிர்ச்சியடையவில்லை. நாம் ஏற்கனவே பார்த்தபடி நம் வேதாகமங்களில் இப்பகுதி தெளிவற்றதாகவே உள்ளது. ஆனால் பழைய ஏற்பாட்டின் சில கிரேக்க மொழி பிரதிகளில் 12ம் வசனத்தில் "சாமுவேலைக்கண்ட மாத்திரத்தில்" என்பது "சவுலைக் கண்டமாத்திரத்தில்" என்று உள்ளது. உண்மையில் இதுவே மூலமொழியின் சரியான அர்த்தமாகவும் தெளிவற்ற இவ்வசனத்தைத் தெளிவுப்படுத்தும் மொழிபெயர்ப்பாகவும் உள்ளது. இல்லையென்றால் சாமுவேலின் ஆவியைப் பார்த்தவுடன் அப்பெண் தன்னிடம் வந்த மனிதன் சவுல் என்பதை அறிந்துக்கொண்டாள் என்று 12 ம் வசனம் கூறுவதாகவே நாம் கருத வேண்டும் எனினும், இது எந்தவித அர்த்தமுமற்ற குழப்பமான வசனமாகவே இருக்கும். ஏனெனில், சாமுவேலின் ஆவியைப் பார்த்து சவுலை அடையாளம் காண்பது நடைமுறையில் சாத்தியப்படாது. ஆனால் "சவுல் வேஷம் மாறி வேறு வஸ்திரம் தரித்தவனாய்" (1சாமு 28 : 8), அதாவது இராஜ வஸ்திரத்தை அணியாமல் வேறு ஆடைகளுடன் அஞ்சனம் பார்க்கும் பெண்ணிடம் சென்றதினால், ஆரம்பத்தில் அவன் யார் என்தை அப்பெண்ணால் அறிந்துக்கொள்ள முடியவில்லை. ஆனால், அவள் அஞ்சனம் பார்க்கும் செயலை ஆரம்பித்தபோது, தனக்குள் இருக்கும் பிசாசுகளின் மூலம் தன்னிடத்தில் வந்திருப்பது சவுல் என்பதை அறிந்துக்கொண்டதோடு, அவன் தன்னைக் கொல்லுவதற்காக வந்திருக்கிறான் என்று எண்ணி அதிர்ச்சியடைந்தாள். இதனால்தான், மாறுவேஷத்தில் அஞ்சனம் பார்க்க வந்த சவுலிடம் அப்பெண், "சவுல் அஞ்சனம் பார்க்கிறவர்களையும், குறிசொல்லுகிறவர்களையும். தேசத்தில் இராதபடிக்கு நிர்மூலமாக்கின செய்தியை நீர் அறிவீரே, என்னைக் கொன்றுபோடும்படி நீர் என் பிராணனுக்குக் கண்ணி வைக்கிறது என்ன? என்று கேட்டாள் (1சாமு 28 : 9) தன்னிடத்தில் வந்தவன் சவுல் என்பதை அறிந்தபோது அதிர்ச்சியடைதாள் (1சாமு 28 : 12) எனவே சாமுவேலின் ஆவியை தேவன் கொண்டுவரவுமில்லை. அதை கண்டு அப்பெண் அதிர்ச்சியடையவுமில்லை.

31. சவுலினுடைய மரணத்திற்கான முக்கியமான காரணங்களில் ஒன்றாக அவன் அஞ்சனம் பார்த்த செயல் இருப்பதை 1 நாளாகமம் 10:13-14 அறியத்தருகிறது. "அவன் கர்த்தருடைய வார்த்தையைக் கைக்கொள்ளாமலும், கர்த்தரைத் தேடாமலும் அஞ்சனம் பார்க்கிறவர்களிடத்திற்குச் சென்றதினால், கர்த்தர் அவனைக் கொன்றார்" என்று 1நாளா 10:13-14ல் குறிப்பிடப்பட்டுள்ளது. நியாயப்பிரமாணத்தின்படி, அஞ்சனம் பார்ப்பது மரண தண்டனைக்குரிய பாவமாக உள்ளது. (லேவி 20 : 6). இதனால் அஞ்சனம் பார்க்கச் சென்று 24 மணித்தியாலங்களுக்குள் சவுல் மரணமடைந்தான். அஞ்சனம் பார்க்கிறவர்களையெல்லாம் நாட்டைவிட்டு அகற்றும் பணியைச் செய்யவேண்டியவனாயிருந்த சவுலே அஞ்சனம் பார்க்க சென்றதினால் தேவன் அவனை இவ்விதமாக தண்டிதுள்ளார். எனவே, அஞ்சனம் பார்க்கும் பெண்ணின் செயலின் ஊடாகத் தேவன் சாமுவேலின் ஆவியை கொண்டு வந்திருந்திருந்தால் சவுல் அஞ்சனம் பரர்க்கச் சென்றதற்காகத் தேவன் அவனைக் கொல்வது அர்த்தமற்ற செயலாக இருப்பது மட்டுமல்லை, இது தேவன் முரண்பாடுடையவர் என்பதற்கான ஆதாரமாகவும் இருக்கும். மக்கள் அஞ்சனம் பார்ப்பதையும் மரித்தவரின் ஆவிகளுடன் தொடர்புக்கொள்ள முற்படுவதையும் தேவன் பாவமான செயல்களாகக் கருதினதினாலேயே, இத்தகைய காரியத்தைச் செய்த சவுலை அவர் தண்டித்துள்ளார். எனவே அஞ்சனம் பார்க்கும் செயலுக்கு உதவும் விதத்தில் தேவன் மரித்துப்போன சாமுவேலின் ஆவியை கொண்டு வந்தார் என்று கூறமுடியாது.

32. அஞ்சனம் பார்க்கும் பெண் கொண்டு வந்த ஆவி சாமுவேலைப் போல பேசியதினாலும், அந்த ஆவி கூறியவைகள் அடுத்த நாள் சவுலின் வாழ்வில் நடைபெற்றதினாலும் சாமுவேலின் ஆவியே வந்திருக்கவேண்டும் என்று சிலர் கருதுகின்றனர். ஆனால் ஒளியின் தூதனைப்போல வேஷமிட்டு மக்களை ஏமாற்றும் பிசாசினால் சாமுவேலைப்போல தோற்றமளித்து அவனைப்போல பேசமுடியாது என்று இவர்கள் எண்ணுவது அர்த்தமற்றது. பிசாசின் ஆவிகள் மனிதனை வஞ்சிப்பவைகளாய் இருப்பதனால், மரித்த சாமுவேலின் ஆவியே வந்துள்ளது என்னும் எண்ணம் சவுலுக்கு ஏற்படும் விதத்தில் பிசாசின் ஆவி பேசியது. மனிதர்கள் உயிருடன் இருக்கும்போது அவர்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள் என்பதைப் பிசாசுகள் அறிந்திருப்பதனால். அவர்களுடைய மரணத்தின் பின்னர் அவர்களைப்போல பிசாசுகளினால் நடிக்கக் கூடியதாயுள்ளது. இதனாலேயே அஞ்சனம் பார்க்கும் பெண் கொண்டு வந்த ஆவி சாமுவேலைப்போல தோற்றமளித்தது. மேலும், அஞ்சனம் பார்க்கிறவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கப்படும் என்பதை வேதாகமம் மூலமும் (லேவி 20:6) சவுலுக்கு என்ன நடக்கும் என்பதை சாமுவேல் உயிரோடிருந்த போது முன்னிறிவித்த தீர்க்கதரிசனத்தின் மூலமும் அறிந்திருந்த பிசாசு, தேவக்கட்டளையை மீறி அஞ்சனம் பார்க்கும் சவுலுக்கு அத்தண்டனை கிடைக்கும் என்பதை அறிவித்தது. உண்மையில், சாமுவேல்

உயிரோடிருந்தபோது கூறியவற்றையே இச்சம்வத்தில் அஞ்சனம் பார்க்கம் பெண் கொண்டுவந்த ஆவி சவுலுடன் பேசியுள்ளது. மேலும், பிசாசின் ஆவிகள் எதிர்காலத்தில் நடப்பவைகளை அறியும் அறிவுடையவைகளாகவே உள்ளன. இதனால் சவுலுக்கு என்ன நடக்கும் என்பதை பிசாசின் ஆவியினால் கூறக்கூடியதாயிருந்தது. எனவே "அஞ்சனம் பார்க்கும் பெண் கொண்டுவந்த ஆவி, மறுநாளில் சவுல மரணமடைவதை முன்னறிவித்ததினால், சாமுவேலின் ஆவியே வந்திருக்கவேண்டும்" என்னும் தர்க்கம் எவ்வீதத்திலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

33. அஞ்சனம் பார்க்கும் பெண் கொண்டுவந்த ஆவி சாமுவேலினுடையது அல்ல என்பதை உறுதிப்படுத்தும் சிலகுறிப்புகள் 1 சாமுவேல் 28ம் அதிகாரத்தில் உள்ளன. அஞ்சனம் பார்க்கும் பெண், "தேவர்கள் பூமிக்குள்லிருந்து ஏறிவருவதைக்" (1 சாமு 28 : 18) காண்பதாகவே கூறினாள். மரித்தோரின் ஆவிகளை வேதாகமம் தேவர்கள் என்னு அழைப்பதில்லை. அஞ்சம் பார்க்கும் செயல் பிசாசின் ஆவிகளினால் செய்யப்படுவதால், அப்பெண், தனக்கு உதவிடும் பிசாசுகளைத் தேவர்கள் என்று குறிப்பிட்டுள்ளாள். மேலும், அப்பெண் குறிபட்பிட்டுள்ள விதமாக மரித்தோரின் ஆவிகள் பூமிக்குள் இருப்பதில்லை. அவை தேவனிடம் செல்வதாகவே வேதாகமம் கூறுகிறது. (பிர 12:7 3:21) எனவே, தேவனிடம் சென்ற சாமுவேலின் ஆவியை அஞ்சனம் பார்க்கும் பெண் "பூமிக்குள் இருந்து வருவதாகக் கண்டிருக்க முடியாது. மேலும் அஞ்சனம் பார்க்கும் பெண் கண்ட உருவம், சாமுவேல் இவ்வுலகத்தில் வாழ்ந்த தோற்றத்திலேயே இருந்தது. "சால்வையைப் போர்த்திக் கொண்டிருக்கிற ஒரு முதிர்ந்த வயதான மனுஷன் எழும்பி வருகின்றான்" என்றே அப்பெண் கூறினாள் (1 சாமு 28 : 14) எனவே இது பரலோகத்திலிருந்து வந்த சாமுவேலின் ஆவி அல்ல. சாமுவேல் பூமியில் வாழ்ந்தபோது எத்தகைய தோற்றத்தில் இருந்தாரோ, அத்தகைய தோற்றத்தில் வந்த பிசாசின் ஆவியாகவே உள்ளது.

34. மேற்கண்ட ஆராய்ச்சி கட்டுரையின் பகுதிகளை நீங்கள் நன்கு தியானித்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். இப்போது பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலின் படி வேதவாக்கியங்களை கொண்டு, இந்த ஆராய்ச்சி கட்டுரையின் சாராம்சத்தை மறுத்து நமக்கு ஒரு விசை ஒப்புக்கொடுக்கபட்ட உபதேசத்தை இங்கு எழுதுகிறேன். தியானித்து பெலனடையுங்கள். உங்களுக்கு எங்கள் இருவரில் யாருடைய விளக்கம் சரியாக தோன்றுகிறதோ அதைப் பற்றிக்கொள்ளுங்கள். நான் ஒரு டாக்டர் அல்ல. ஞானியும், கல்விமானும் அல்ல. மாறாக ஒரு சாதாரண மனிதன், வாழ்க்கையில் பாடுகள் நிறைந்தவன். கர்த்தர் தம்முடைய சரீரமாகிய சபை பக்தி விருத்தியடைய ஏற்படுத்தப்பட்ட ஊழியங்களில் நான் ஒரு சுவிசேஷகன். இதற்கு மிஞ்சி நான் என்னில் ஒன்றும் இல்லாதவன். என்னுடைய ஊழியத்தின் பாதையில் என் சுய தகுதிகள் எதுவும் என்னை கர்த்தர் கொடுத்த ஊழியத்திற்கு தகுதியாக்கியது கிடையாது. அவரே என்னை தகுதிப்படுத்தியுள்ளார். கடந்த 30 ஆண்டுகளாக திராட்சைச் செடியில் கனிக்கொடுக்கும் கொடியாக நிலைத்திருக்கிறேன்.

35. டாக்டர் M.S. வசந்தகுமார் அவர்கள் **சர்சைக்குரிய பகுதிகளுக்கு சரியான பதில்கள்** எந்த தலைப்பின் முதல் பத்தியின் தெடக்கத்தில் கீழ்கண்டவாறு எழுதுகிறார். 1சாமு. 28:3-6 வசனங்களில், இஸ்ரவேல் ராட்சியத்தின் முதலாவது அரசனான சவுல் என்பவனோடு மரித்துப்போன தீர்க்கதரிசியாகிய சாமுவேலின் ஆவி பேசியதாக கூறப்பட்டுள்ளது. (பத்தி 22) என வேதவாக்கியங்களை எடுத்துக் கூறி, பின் அதற்கு மறுப்பு தெரிவித்து எழுதுவது எந்த ஞானம்? தேவனே தம்முடைய வார்த்தைக்கு வியாக்கியானி. வேறு யாரும் விளக்கம் கொடுக்க முடியாது. டாக்டர். M.S. வசந்தகுமார் ஞானம் இப்பிரபஞ்சத்திற்குறிய ஞானம். மேலும் மத்திய பகுதியில் கீழ்கண்டவாறு எழுதுகிறார். **மேலும் இது தெளிவற்ற ஒரு பகுதியாக, வாசிப்பவர்களுக்கு குழப்பங்களை ஏற்படுத்தும் விதத்தில் உள்ளது.** பாருங்கள் இவர் இங்கு தேவஆவியினால் அருளப்பட்ட வேதவாக்கியங்களையே குறைகூறுகிறார். தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிற வேதவாக்கியங்களை குறை கூறும் அளவிற்கு டாக்டர் பட்டம் இவருக்கு ஞானத்தை கொடுத்துள்ளது. அந்தோ பரிதாபம்!

36. இங்கு ஒரு சம்பவத்தை உங்களுக்கு நினைவுப்படுத்த விரும்புகிறேன். நமக்கு பிரியமான சகோதரனாகிய பவுல் தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே நம்முடைய கர்த்தரின் நீடிய பொறுமையை இரட்சிப்பென்றே எண்ணுங்கள் என்று எழுதியிருக்கிறான். அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாய் இருக்கிறது . கல்லாதவர்களும், உறுதியில்லாதவர்களும் தங்களுக்கு கேடு வரத்தக்கதாக அவைகளை புரட்டினார்கள் என 2 பேது. 3 : 15, 16 வசனங்களில் வாசிக்கிறோம்.

37. பாருங்கள் அன்று பவுல் சொல்லிய சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாய் இருக்கிறது என கூறி தங்களுக்கு கேடு வரத்தக்கதாக அவைகளை புரட்டினார்கள் என பேதுரு எழுதுகிறான். அது போன்று தான் டாக்டர் M.S. வசந்தகுமார் அவர்கள் 1 சாமு. 28 : 3-25 வசனங்களில் கூறப்பட்டுள்ளவைகள் தெளிவற்ற ஒரு பகுதியாகவும், வாசிப்பவர்களுக்கு குழப்பங்களை ஏற்படுத்தும் விதத்தில் உள்ளது என கூறி தேவஆவியினால் எழுதப்பட்ட வேதவாக்கியங்களை புரட்டுகிறார். அந்த வேதப்புரட்டில் டாக்டர். புஷ்பராஜ் அவர்களும் பங்கு கொள்கிறார்கள். தன்னை நம்பியிருக்கும் பல ஆயிரக்கணக்கான ஜாமக்காரன் விசுவாசிகளை வஞ்சிக்கிறார்கள். அவர்களை தவறான பாதையில் வழி நடத்துகிறார்கள். பிரியமானவர்களே நீங்களோ அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே இழுப்புண்டு உங்கள் உறுதியிலிருந்து விலகி, வேதவாக்கியங்களிலிருந்து விலகி விழுந்து போகாதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள். (1 பேது. 3 : 17) டாக்டர். புஷ்பராஜ் ஏதோ ஸ்தாபனசபைகளில் காணப்படும் குறைகளையும், அவைகளின் தலைவர்களின் தில்லு முல்லுகளையும் அவ்வப்போது எடுத்துக் காட்டுகிறார். நல்லது. மற்றபடி அவரிடம் வேதவாக்கியங்களுக்கடுத்த சத்தியம் எதுவும் கிடையாது என்பது எனது கருத்து. சத்தியம் அவரிலிருந்து காணக்கூடாத வெகுதூரத்தில் உள்ளது.

38. இப்பொழுது நாம் 1 சாமு. 28 அதியில் நடந்த சம்பவங்களை தியானிப்போம். நான் 1 சாமு. 15 அதியை என் விளக்கத்திற்கு தொடக்கமாக கொண்டுள்ளேன். இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வந்த போது, அமலேக்கு

அவர்களுக்கு வழி மறுத்த செய்கையை கர்த்தர் மனதில் வைத்திருக்கிறேன் என்றார். 1 சாமு. 15 : 2

அமலேக்கியர் வந்து ரெவிதீமிலே இஸ்ரவேலரோடு யுத்தம் பண்ணினார்கள்.
அப்பொழுது மோசே, யோசுவாவை நோக்கி : நீ நமக்காக மனிதரை தெரிந்துக்கொண்டு, புறப்பட்டு அமலேக்கோடே யுத்தம் பண்ணு; நாளைக்கு நான் மலையுச்சியில் தேவனுடைய கோலை என் கையில் பிடித்துக்கொண்டு நிற்பேன் என்றான்.
யோசுவா தனக்கு மோசே சொன்னபடியே செய்து, அமலேக்கோடே யுத்தம் பண்ணினான். மோசேயும் ஆரோனும் ஊர் என்பவனும் மலையுச்சியில் ஏறினார்கள்.
மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில், இஸ்ரவேலர் மேற்க்கொண்டார்கள் : அவன் தன் கையை தாழவிடுகையில் அமேலேக்கு மேற்கொண்டான்.
மோசேயின் கைகள் அசந்து போயிற்று. அப்போது அவர்கள் ஒரு கல்லை கொண்டு வந்து அவன் கீழே வைத்தார்கள் : அதின் மேல் உட்கார்ந்தான். ஆரோனும் ஊரும் ஒருவன் ஒரு பக்கத்திலும், ஒருவன் மறுப்பக்கத்திலும் இருந்து, அவன் கைகளை தாங்கினார்கள் : இவ்விதமாய் அவன் கைகள் சூரியன் அஸ்தமிக்கும் வரைக்கும் ஒரே நிலையாய் இருந்தது.
யோசுவா அமலேக்கையும் அவன் ஜனங்களையும் பட்டைய கருக்கினாலே முறியடித்தான்.
பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி : இதை நினைவு கூறும் பொருட்டு நீ ஒரு புத்தகத்தில் எழுதி, யோசுவாவின் செவி கேட்கும்படி வாசி. அமலேக்கை வானத்தின் கீழெங்கும் இராதபடிக்கு நாசம் பண்ணுவேன் என்றார்.
மோசே ஒரு பலிபீடத்தை கட்டி, அதற்கு யேகோவாநிசி என்று பெயரிட்டு,
அமலேக்கின் கை கர்த்தருடைய சிங்காசனத்திற்கு விரோதமாய் இருந்தபடியால், தலைமுறை தலைமுறை தோறும் அவனுக்கு விரோதமாய் கர்த்தரின் யுத்தம் நடக்கும் என்றான். யாத் 17 : 8-16

39. எகிப்திலிருந்து புறப்பட்டு வருகிற வழியிலே, அமலேக்கு தேவனுக்கு பயப்படாமல் உனக்கு எதிராக வந்து, நீ இளைத்து விடாய்திருக்கையில், பின் வருகிற உன் பாளையத்தில் உள்ள பலவீனரையெல்லாம் வெட்டினான் என்பதை நினைத்திரு.
உன் தேவனாகிய கர்த்தர் நீர் சுதந்தரித்துக்கொள்ள உனக்கு கொடுக்கும் தேசத்தின் சுற்றுப்புறத்தாராகிய உன்னுடைய சத்ருக்களையெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் விலக்கி, உன்னை இளைப்பாற பண்ணும்போது, நீ அமலேக்கின் பேரை வானத்தின் கீழ் இராதபடிக்கு அழியப்பண்ணகடவாய். இதை மறக்கவேண்டாம். உபா. 25 : 17-19

40. இப்பொழுது சாமுவேல் சவுலிடம் போய் அமலேக்கை மடங்கடித்து, அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்து, அவன் மேல் இரக்கம் வைக்காமல், புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்று போட கர்த்தருடைய வாக்கைக் கொண்டு கட்டளையிட்டான். (1 சாமு. 15 : 1-3)

41. தேவனுடைய கட்டளை இப்படியிருக்க, சவுலும் ஜனங்களும் அமலேக்கியரின் ராஜாவாகிய ஆகாசையும், ஆடு, மாடுகளில் முதல்தரமானவைகளையும், இரண்டாந்தரமானவைகளையும், ஆட்டு குட்டிகளையும், நலமான எல்லாவற்றையும், அழித்துப்போட மனதில்லாமல் தப்பவைத்து; அற்பமானவைகளும் உதவாதவைகளுமான சகல வஸ்துக்களையும் முற்றிலும் அழித்துப்போட்டார்கள். ஜனங்கள் யாவரையும் பட்டய கருக்கினாலே சங்காரம் பண்ணினார்கள். (1 சாமு. 15 : 8,9).

42. இதனால் கர்த்தர் சவுலை இராஜாவாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டார். ஏனென்றால் அவன் கர்த்தருடைய வார்த்தைகளை நிறைவேற்றாமல் போனான் (1 சாமு. 15 : 11) கர்த்தருடைய சொல்லை கேளாமல் கொள்ளையின் மேல் பறந்து, கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தான் (1 சாமு. 15 : 13) சவுல் முடிவில் பழியை ஜனங்கள் மீது போட்டான். எப்படியெனில்? ஜனங்கள் தேவனாகிய கர்த்தருக்கு கில்காலிலே பலியிடுவதற்காக, கொள்ளையிலே சாபத்தீடாகும் ஆடு மாடுகளிலே பிரதானமானவைகளை பிடித்துக்கொண்டு வந்தார்கள் என்றான் (1 சாமு. 15 : 21) சாமுவேலோ, பலியை பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டு கடாக்களின் நிணத்தை பார்க்கிலும், செவிக்கொடுத்தலும் உத்தமம். நீர் கர்த்தருடைய வார்த்தையை புறக்கணித்தபடியினால், அவர் உம்மை இராஜாவாய் இராதாபடிக்கு புறக்கணித்து, தள்ளினார் என்றான். (1 சாமு. 15 : 22, 23) இதனால் கர்த்தருடைய ஆவி சவுலைவிட்டு நீங்கினார். (1 சாமு. 16 : 14 ) இந்த சம்பவங்களுக்கு பின் சாமுவேல் மரணம் அடைந்தான். (1 சாமு. 25 : 1).

43. அஞ்சனம் பார்க்கிறவர்களும், குறி செல்லுகிறவர்களுமாய் இருகிற புருஷனாகிலும், ஸ்திரீயாகிலும் கொலைச் செய்யப்பட வேண்டும். அவர்கள் மேல் கல் எறிவார்களாக. (லேவி. 20 : 27) சூனியக்காரிகளை உயிரோடே வைக்க வேண்டாம் (யாத். 22 : 18) அஞ்சனம் பார்க்கிறவர்களை நாடி, குறி சொல்லுகிறவர்களை தேடாதிருங்கள். அவர்களாலே தீட்டுப்பட வேண்டாம். நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். (லேவி. 19 : 31) குறி சொல்லுகிறவனும் (Charmer), அஞ்சனம் பார்க்கிறவனும் (Cousulter of Familiar Spirit) , சூனியக்காரனும் (Wizard), செத்தவர்களிடத்தில் குறி கேட்கிறவர்களும் (Necromancer) உங்களுக்குள்ளே இருக்கவேண்டாம்.This is the belief that the living can communicate with the dead and that the spirits of the dead can appear to the living. Those who practice this is called Necromancer. இப்படிப்பட்டவர்களை செய்கிறவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன். இப்படிப்பட்ட அருவருப்புகளின் நிமித்தம் உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உன் முன்னின்று துரத்திவிடுகிறார். (உபா. 18 : 10-12).

44. அஞ்சனம் பார்க்கிறவர்களை குறித்து கர்த்தருடைய வார்த்தை : அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறி சொல்லுகிறவர்களையும் பின் தொடர்ந்து மோசம் போக எந்த ஆத்துமா அவர்களை நாடுகிறானோ, அந்த ஆத்துமாவுக்கு விரோதமாக எதிர்த்து நின்று, அவனை தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு

போகப்பண்ணுவேன். ஆதலால் நீங்கள் உங்களை பரிசுத்தப்படுத்தி பரிசுத்தமாய் இருங்கள். நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். என் கட்டளைகளை கைக்கொண்டு நடவுங்கள், நான் உங்களை பரிசுத்தமாக்குகிற கர்த்தர். (லேவி. 20 : 6 - 8).

45. அவர்கள் உங்களை நோக்கி : அஞ்சனம் பார்க்கிறவர்கள் இடத்திலும், முணுமுணென்று ஓதுகிற குறிகாரரிடத்திலும் வாருங்கள் என்று சொல்லும் போது, ஜனங்கள் தங்களை தேவனிடத்தில் விசாரிக்க வேண்டியதல்லவோ? உங்களுக்காக செத்தவரிடத்தில் விசாரிக்கலாமா? (ஏசா. 8 : 9)

46. சவுல் அஞ்சனம் பார்க்கிறவர்களையும், குறி சொல்லுகிறவர்களையும் தேசத்தில் இராதபடிக்கு துரத்திவிட்டான் (1 சாமு. 28 : 3)

47. இந்நிலையில் பெலிஸ்தர் இஸ்ரவேல் மேல் யுத்தம் பண்ண தங்கள் சேனைகளை போருக்கு கூட்டினார்கள். (1 சாமு. 28 : 1) சவுல் கர்த்தரிடத்தில் விசாரிக்கும் போது, கர்த்தர் அவனுக்கு சொப்பனங்களினாலாவது, ஊரீமினாலாவது, தீர்க்கதரிசிகளினாலாவது மறு உத்திரவு அருளவில்லை (1 சாமு. 28 : 6) ஏனென்றால் அவன் இராஜாவாய் இராதபடிக்கு கர்த்தர் அவனை புறக்கணித்தார்.

48. இக்காலத்தில் நம்முடைய ஊரீம், நம்முடைய சபை தலைவர்களாகிய போப் அல்ல, பிஷப் அல்ல, தலைமை போதகர் அல்ல, இன்டர்நேஷனல் பிரசங்கியார் அல்ல, பட்டங்கள் பல பெற்ற டாக்டர்கள் அல்ல மாறாக அது தேவனுடைய வார்த்தையாகும். மேற்கூறியவர்கள் யாவதும் ஏதோ ஒரு நாள் மடிந்துப் போவார்கள். ஆனால் தேவனுடைய வார்த்தையோ என்றென்றைக்கும் நிலைநிற்கும். தேவனுடைய வார்த்தையே நம்மை கடைசி நாளில் நியாயந்தீர்க்கும். (யோ. 12 : 48)

49. பெலிஸ்தரிடம் யுத்தத்திற்கு செல்வது குறித்து கர்த்தர் சவுலுக்கு மறுஉத்தரவு அருளாததால், தான் செய்ய வேண்டியதை தன்னை இராஜாவாக அபிஷேகம் பண்ணி வைத்த, மரித்த தீர்க்கதரிசியாகிய சாமுவேலை எழும்பி வரப்பண்ணி அவனிடம் அறிய விரும்பினான். சாமுவேல் மரித்து சில ஆண்டுகள் ஆகிவிட்டது. ஒரு தீர்க்கதரிசி மரித்தாலும் அவன் தன் தீர்க்கதரிசி ஸ்தானத்தை ஒரு போதும் இழந்துப்போவது இல்லை. ஏனென்றால் அவன் காலத்தில் தேவனுடைய வார்த்தை அவனிடத்தில் வந்தது. அவன் அந்த காலத்திற்குறிய தேவனுடைய வார்த்தையாக இருந்தான். தேவனாக இருந்தான்.

50. பாருங்கள் எலிசா மரணத்துக்கேதுவான வியாதியாய் கிடந்து மரணம் அடைந்தான். அவனை அடக்கம் பண்ணினார்கள். மோவாபியரின் தண்டுகளில் மரித்த ஒருவனை அடக்கம் பண்ணப்போனார்கள். அந்த மனுஷனை எலிசாவின் கல்லறையில் போட்டார்கள். அந்த மனுஷனினின் பிரேதம், எலிசாவின் எலும்புகளின் மேல் பட்டபோது, அந்த மனுஷன் உயிரோடெழுந்து, தன் கால்களை ஊன்றி எழுந்திருந்தான் (2 நாளா. 13 : 14, 20,21) பாருங்கள் எலிசா மரித்தான். ஆனாலும் அவன் தன் தீர்க்கதரிசி ஸ்தானத்தை இழந்துபோகவில்லை. மோசேயும், எலியாவும் கூட தங்கள் ஸ்தானத்தை இதுவரை இழந்து போகவில்லை. தியானியுங்கள் மத் 17 : 3. மீண்டுமாக இவர்கள் இருவரும் வெளி. 11 : 6 ல் வருகிறார்கள்.

51. இப்பொழுது கவனியுங்கள். மரித்த சாமுவேல் அப்பொழுது பூமியின் கீழே உள்ள பரதீசில் இளைப்பாறிக்கொண்டிருந்தான். அவன் அப்பொழுது மகிமையடைந்து தேவனுடைய சமூகத்திற்கு செல்லவில்லை. மகிமைக்குள் அவன் அப்பொழுது பிரவேசிக்கவில்லை. மரித்த பரிசுத்தவான்கள் மகிமையடையும் வரை அவர்கள் இளைப்பாற ஒதுக்கபட்ட இடம் தான் பூமியின் கீழ் உள்ள பரதீசு (Paradise). இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்படும் முன் பாவங்கள் மூடப்பட்டது. எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான். (சங். 32 : 1) ஆனால் அவனுடைய பாவம் மன்னிக்கப்படவில்லை. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்ட பின்புதான் ஒருவருடைய பாவங்கள் மன்னிக்கபட்டது. ஏனென்றால் இரத்தம் சிந்துததில்லாமல் பாவ மன்னிப்பு உண்டாகாது. (எபி. 9 : 22) இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்ட பின்பு பரதீசும் எடுக்கப்பட்டது.

52. இப்பொழுது நீங்கள் உங்கள் பாவங்களுக்கு முதலில் மனந்திருப்பவேண்டும். உங்கள் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும். (அப். 2 : 38) ஏனென்றால் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும். (1 யோ. 1 : 7) இரத்தம் சிந்துதல் இல்லாமல் மன்னிப்பு கிடையாது (எபி. 9 : 22). அன்று அப்போஸ்தலர்களுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஏறக்குறைய 3000 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். அவ்வாறாக இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் (அப். 2 : 37 - 47)

53. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்படும் வரை பூமியின் கீழே பரதீசு இருந்தது. அங்கு நித்திரை அடைந்த பரிசுத்தவான்கள் இளைப்பாரினார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்ட பின்பு பூமியின் கீழே உள்ள பரதீசு எடுப்பட்டு போயிற்று. இப்பொழுது மரித்த பரிசுத்தவான்கள் நேராக தேவனுடைய சமூகத்தை அடைகின்றனர். இந்த தேகத்தை விட்டு குடிப்போன பின் கர்த்தரிடத்தில் குடியிருக்கிறோம். (2 கொரி. 5 : 8) நாம் நம்முடைய தேகத்தை விட்டு பிரிந்தபின் கிறிஸ்துவுடனே கூட இருக்கிறோம். (பிலி. 1 : 23).

54. நீங்கள் மத் 27 : 52, 53 மற்றும் அப் 1 : 9 வசனங்களை தியானியுங்கள். அங்கு கல்லறைகள் திறந்து, நித்திரை அடைந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்கள் எழுந்திருந்தது. அவர்கள் கல்லறைவிட்டு புறப்பட்டார்கள். பரிசுத்த நகரத்தில் பிரவேசித்தார்கள். அநேகருக்கு காணப்பட்டார்கள். இயேசு உயர எடுத்துக்கொள்ப்பட்டபோது பரிசுத்தவான்களையும் அழைத்துக்கொண்டு சென்றார். பழைய ஏற்பாடு பரிசுத்தவான்கள் தற்போது தேவனுடைய

சமூகத்திற்கு சென்றுவிட்டனர்.

55. நாம் இவ்வுலகத்திற்கு வரும்போது, இங்கு மூன்று பிரமாணங்களில் வாழ்கிறோம். ஒன்று ஒளி, நமது பார்வை ஒளியுடன் தொடர்புக் கொள்கிறது. மற்றொன்று பொருள் (Matter) நமது உணர்ச்சி பொருளுடன் தொடர்பு கொள்கிறது. மூன்றாவது காலம். விஞ்ஞானத்தின் மூலம் நாம் நான்காவது பரிமாணத்துடன் தொடர்பு கொள்கிறோம். ஒரு பாவி, அவிசுவாசி மரித்த பிறகு போகுமிடம் ஐந்தாம் பிரமாணம். இது மிகவும் பயங்கரமான பிரமாணம்.

56. பாருங்கள் ஒரு மனிதனுக்கு தீக்கனவு (Night Mare) உண்டாகுமானால் , அவன் முழுவதும் உறக்க நிலையில் இல்லை. அவன் விழித்துக்கொண்டிருக்கவும் இல்லை. அவன் உறக்கத்திற்கும் விழிப்புக்கும் இடையே உள்ள நிலையில் இருக்கிறான். அது தான் அவனுக்கு பயங்கரமான நடுக்கம் ஏற்படும் படி செய்து, அவனை அலற வைக்கிறது. மனமாற்றம் அடையாத ஒரு மனிதன் எங்கு செல்கிறான் என்பதை இது காண்பிக்கிறது. அவன் தன் காலத்தை வாழ்ந்து முடித்துவிட்டு, உலகில் மரிக்கிறான். ஆனால் தேவனுடைய சமூகத்தில் செல்ல முடியாது. ஏனெனில் இரத்தம் இல்லாமல் அங்கு செல்ல அவன் தகுதியுடையவன் அல்ல. அவன் மாட்டிக்கொள்கிறான். அவனால் மறுபடியும் உலகத்திற்கு வரமுடியாது . ஏனென்றால் உலகத்தில் அவன் காலம் முடிந்து விட்டது. அவன் இடையிலே மாட்டிக்கொண்டு தீக்கனவை பெறுகிறான். அவன் தேவனுடைய சமூகத்திற்கு சென்று இளைப்பாறவும் முடியாது. அதே சமயத்தில் அவன் உலகத்திற்கு வரவும் முடியாது. ஏனென்றால் அவனுடைய காலம் முடிந்து விட்டது. அவன் தீக்கனவில் இருக்கிறான். அங்கே அவன் நியாத்தீர்ப்பு நாள் வரைக்கும் இருக்கிறான்.

57. ஒரு உண்மையான கிறிஸ்தவன், மறுபிறப்பு அடைந்த கிறிஸ்தவன் மரிக்கும் போது ஆறாவது பிரமாணத்திற்கு செல்கிறான். அவன் தேவனுடைய பலிபீடத்தின் கீழ், தேவனுடைய சமூகத்திற்கு சென்று அங்கு இளைப்பாறுகிறான். ஆக அன்று உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் ஆறாவது பரிமாணத்தில் இப்பொழுது இளைப்பாறிக்கொண்டிருக்கிறார்கள், மகிமையடையும் வரை. இப்பொழுது பரதீசு என்பது கிடையாது.

58. கடந்த மார்ச் 2009 ல் சுமார் 20 நாட்கள் திருவைகுண்டத்தில் இருந்தேன் என் வீட்டை பழுது பார்க்க சென்றிருந்தேன். அந்நாட்களில் ஒரு நாள் எனது உறவினர் வீட்டில் மறைந்த டாக்டர். D.G.S. தினகரன் அவர்களின் பிரசங்கத்தை கேட்டேன். அது அவர் தான் மூன்றாம் வானம் வரைக்கும் எடுக்கப்பட்டதாக கூறினார். மூன்றாம் வானம் என்பது ஆறாவது பரிமாணம். பவுல் மூன்றாம் வானம் வரைக்கும் தான் எடுத்துக்கொள்ளப்பட்டதாக கூறுவதை நாம் 2 கொரி 12 : 2 ல் வாசிக்கிறோம். முன்பு பூமியின் கீழ் இருந்த பரதீசு, கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்த பின் மேலே வானத்திற்கு சென்றது. இப்பொழுது பூமியின் கீழ் பரதீசு இல்லை. அது ஆறாவது பரிமாணமாக, மூன்றாம் வானமாக மேலே வானத்தில் உள்ளது. இங்கு வரை டாக்டர். D.G.S. தினகரன் தான் எடுத்துக்கொள்ளப்பட்டதாக கூறுகிறார்.

59. ஆனால் பவுலுடைய ஊழிய வாழ்க்கையையும், கிறிஸ்துவுக்காக அவன் பட்ட பாடுகளையும், அதே வேலையில் நமது டாக்டர் டாக்டர். D.G.S. ஊழிய வாழ்க்கையும் சற்று வேதவாக்கியங்களை கொண்டு ஆராய்ந்து பாருங்கள். டாக்டர். D.G.S. கிறிஸ்துவின் பெயரில், சுவிசேஷ ஊழியத்தின் பெயரில் மக்களை வசீகரித்து, கவர்சித்து, ஏமாற்றி, அரசியல் தலைவர்களை தன் கைகளுக்குள் வைத்துக்கொண்டு கோடி கோடியாக அடித்த பகல் கொள்ளைகளுக்கு எல்லையே இல்லை. ஏமாளிகள் இருக்கிற வரை, ஏமாற்றுக்காரனுக்கு என்ன குறை? இந்நாட்களில் கிறிஸ்தவ ஊழியர்கள் மத்தியில் ஏமாற்றுக்காரர்களுக்கு குறைவே இல்லை. இந்நிலையில் இவர் மூன்றாம் வானம் வரை எடுத்துக்கொள்ளப்பட்டேன் என்பது வஞ்சிக்கும் ஆவியின் ஒரு வஞ்சிப்பு. அந்த தகுதி இவருக்கு இருந்ததில்லை. இது பொய்யை நம்பும் ஜனங்களுக்கு ஒரு பொய்.

60. தேவன் ஏழாம் பரிமாணத்தில் இருக்கிறார்.

61. இப்பொழுது சவுல் மரித்த தீர்க்கதரிசியாகிய சாமுவேலை பரதீசிலிருந்து எழுந்து வரப் பண்ணி, அவனிடம் பெலிஸ்தருடன் யுத்தத்திற்கு செல்வது குறித்து கர்த்தருடைய வார்த்தையை கேட்டு அறிய ஒரு அஞ்சனம் பார்த்து குறி சொல்லும் ஸ்திரீயை தேடினான் (Seek me a Women that hath a familiar Spirit. Find me a women who is a medium and I will go and consult her what is going to happen?) இறந்த சாமுவேலின் ஆவியை சவுல் நாடுகிறான் (1 சாமு 28 : 11)

62. பிசாசுகளை கொண்டு அஞ்சனம் பார்த்து, குறி சொல்லும் ஒரு ஸ்திரீ மரித்து பரதீசிலிருக்கும் ஒரு தீர்க்கதரிசியை எழும்பி வர செய்ய முடியுமா? முடியவே முடியாது. அப்படியானால் அவள் செய்வது என்ன? சவுல் எழும்பி வர செய்ய சொல்லும் மரித்த தீர்க்கதரிசியாகிய சாமுவேலை போன்று வஞ்சிக்கும் ஒரு ஆவியை, பிசாசை (இறந்து போனவர்களின் ஆவி அல்ல) அவன் தோன்ற செய்து அதை தனக்கு குறி சொல்லுவதற்கு உதவியாக வைத்துக்கொண்டு, சவுல் சாமுவேலிடம் எதை கேட்கச் சொல்லுகிறானோ, அதை அவள் அந்த வஞ்சிக்கும் ஆவியிடம் கேட்டு, சவுலிடம் கூறுவாள். அவள் சவுலுக்கும், சாமுவேலின் தோற்றத்தில் உள்ள வஞ்சிக்கும் ஆவிக்கும் பிசாசுக்கும் இடையே ஒரு மீடியமாக இருந்து செயல்படுவாள். (Medium is a person through whom communications are supposedly sent from Devil . Mediums do not have access to the dead but communicate with spirits posing as persons who have died.) அது ஆச்சரியம் அல்ல சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வானே. (2கொரி. 11 : 14) (Appears to be what he is not) அந்த ஸ்திரீயோடு இடைபடும் அந்த வஞ்சிக்கும் ஆவி Familiar Spirit என அழைக்கப்படுகிறது. அந்த Familiar Spirit அஞ்சனம் பார்ப்பவள் எதை கேட்கிறாளோ, அல்லது எந்த பணியை அவள் செய்யும்படி சொல்லுகிறாளோ. அந்த பணியை

செய்யும் ஒரு பணிவிடை ஆவியாக அந்த மீடியமுக்கு உள்ளது. அந்த ஆவி சொல்லும் வாக்கு குறி சொல்லுதல் என அழைக்கப்படுகிறது.

63. தேவனுடைய பிள்ளைகளுக்கு தேவதூதர்கள் பணிவிடை ஆவிகளாகும். பிசாசின் ஒத்தாசையினால் அஞ்சனம் பார்ப்பவர்களுக்கு வஞ்சிக்கும் பிசாசின் ஆவிகள் பணிவிடை ஆவிகளாகும்.

64. ஒரு முறை சாத்தான், கிறிஸ்துவை போன்ற தோற்றம் அளித்து, தன் தலையில் தங்க கிரீடம் சூட்டினவனாய் பெர்கமு சபை தூதன் மார்டின் முன் காட்சி அளித்து என்னை உனக்கு தெரிகிறதா, நான் கிறிஸ்து. என்னை உன்னால் அடையாளம் கண்டுக் கொள்ள முடியவில்லையா? என்றான். மார்டின் அவனை கிறிஸ்து என்று அழைக்க, அறிக்கையிட தயக்கம் காட்டினார். ஏனென்றால் அவர் தேவனுடைய வித்து. ஆம், நீ சாத்தான் தான். நான் உன்னை நன்கு அறிவேன். எனென்றால் என் தேவனுக்கு இன்னும் கிரீடம் சூட்டப்படவில்லை, அவருடைய பரிசுத்தவான்கள் அவருக்கு வரும் காலங்கள் ஒன்றில் தான் கிரீடம் சூட்ட இருக்கிறார்கள் என்றார். அவர் அவன் தோற்றத்தைக் கொண்டு அவனை பகுந்தறிந்தார். சாத்தானை மேற்கொண்டார். சவுலும் இங்கு அந்த ஸ்திரீ கண்ட மனுஷனின் ரூபம் என்ன என்று கேட்க, அவள் பதிலைக் கொண்டு அது சாமுவேல்தான் என சவுல் உறுதி செய்துக் கொண்ட பின்புதான் தரை மட்டும் குனிந்து அவனை வணங்கினான். (1 சாமு. 28 : 13,14)

65. சவுல் ஏற்கனவே அஞ்சனம் பார்க்கிறவர்களையும், குறி சொல்லுகிறவர்களையும் தேசத்தில் இராதபடிக்கு துறத்தி விட்டான். ஏனென்றால் அவர்களை குறித்தும், அவர்களுக்கு உடந்தையாக இருப்பவர்களை குறித்தும் தேவனுடைய பிரமாணங்கள் கடுமையாக இருந்தது. ஆனால் இப்பொழுது சவுலே ஒரு அஞ்சனம் பார்க்கும் ஸதிரீயை தேடித்திரிய வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டான், நிர்பந்தப்படுத்தப்பட்டான். அவனுடைய ஊழியகாரர்கள் மனாசேயின் பட்டணங்களில் ஒன்றாகிய எந்தோரில் (யோசுவா 17 : 11) ஒரு அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ இருக்கிறாள் என கூற, சவுல் தன் வேலையாட்களில் இருவரை அழைத்துக் கொண்டு அவளிடம் சென்றான். அவன் தன் இராஜ உடைகளை களைந்து வேஷம் மாறி, வேறு வஸ்த்திரம் தரித்துக்கொண்டு, தான் இராஜா என்பதை காட்டிக்கொள்ளாதபடி தன்னை முற்றிலுமாக மறைத்து அந்த அஞ்சனம் பார்க்கும் ஸ்திரீயின் வீட்டில் வந்து சேர்ந்தான்.

66. சவுல் அந்த அஞ்சனம் பார்க்கும் ஸ்திரீயிடம் நீ அஞ்சனம் பார்த்து குறி சொல்லி, சாமுவேலை எழும்பி வர பண்ணவேண்டும் என்றான். அவள் முணுமுணென்று ஏதோ ஓத சாமுவேல் வெளிப்பட்டான். அவள் உண்மையான/ நிஜமான சாமுவேலே பரதீசிலிருந்து எழும்பி வரக் கண்ட மாத்திரத்தில் மகா சத்தமாய் கூப்பிட்டாள். ஏனென்றால் அவள் நிஜமான சாமுவேலை எதிர்பார்க்கவில்லை. சாமுவேலின் தோற்றத்தை தரித்து வெளிப்படும் வஞ்சிகும் ஆவியையே / பிசாசையே அவள் எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தாள். நிஜத்தை பார்த்தவுடன் மகா சத்தமாய் கூப்பிட்டாள் (The women that her contact with familiar spirit expected contact with a spirit (posing as Samuel v11) but to her amazement and terror (v12). God actually permited Samuel to appear to her and give a massage of doom to Saul.) உடனே சவுலை நோக்கி : நீர் என்னை மோசம் போக்கினீர் ? நீர் தான் சவுலாச்சுதே என்றாள்.

67. இங்கு சற்று நிதானமாக கவனித்தால் முதலாவது சாமுவேலை எழுப்பி வரப்பண்ண வேண்டும் என்று கேட்டது சவுல் தான் என்பது அவளுக்கு தெரியாது. ஆதலால் தான் அவள் அஞ்சனம் பார்க்கிறவர்களையும், குறி சொல்லுகிறவர்களையும் சவுல் நிர்மூலமாக்கினதை அவனிடம் கூறி, நீர் என் பிராணனுக்கு கண்ணி வைக்கிறது என்ன என்றாள் (1 சாமு. 28 : 9) இரண்டாவது சாமுவேலை கண்ட மாத்திரத்தில் அவள் மகா சத்தமாய் கூப்பிட்டாள். சவுலை அடையாளம் கண்டுக்கொண்டாள். அப்படியானால் அங்கு நடந்தது என்ன?

68. அவள் முணுமெணுன்று ஏதோ ஒன்றை ஓத, அங்கு சாமுவேலைப் போன்ற தோற்றத்தில் வெளிப்பட போகும் வஞ்சிக்கும் ஆவியை/பிசாசை எதிர்நோக்கிக் கொண்டிருந்தாள். ஆனால் அனைத்தும் அவள் எதிர்பார்ப்புக்கு மாறாக நடந்தது. அவள் சாமுவேலின் தோற்றத்தில் வரபோகிற வஞ்சிக்கும் ஆவிக்கு / பிசாசுக்கு பதிலாக உண்மையான / நிஜமான சாமுவேலை அவன் ஆவிக்குரிய சரீரத்தில் (தியாப்பெனி சரீரத்தில்) பூமியின் கீழ் உள்ள பரசீதிலிருந்து எழும்பி வரக் கண்டாள். ஆதலால் அவள் அதிர்ச்சிக்குள்ளானாள், திடுக்கிட்டாள். திணறினாள். ஆதலால் மகா சத்தமாய் அலறினாள். அவளுடைய தொழிலின் படி சாமுவேலைப்போன்று ஆள்மாறட்டம் செய்யும் அவளுக்கு குறி செல்லூம் அந்த வஞ்சிக்கும் ஆவி / பிசாசு தோன்றியிருக்குமானால் அவள் அதிர்ச்சி அடைந்திருக்கவே மாட்டாள். இங்கு அவள் தொழிலுக்கு மாறாக சம்பவங்கள் நடக்க ஆரம்பித்தன. அவளுடைய அஞ்சனம் பார்க்கும் தொழில் அங்கு நடைபெறவில்லை. அது தடை செய்யபட்டது. மேலும் அவள் யாரே ஒருவர் சாமுவேலை எழும்பி வர பண்ண கேட்கிறான் என்று நினைத்து, சவுல் அஞ்சனம் பார்க்கிறவர்களை தேசத்தை விட்டு விரட்டி விட்டதை கூறினாள். இப்பொழுது உண்மையான / நிஜமான சாமுவேல் எழும்பி வந்ததால், சாமுவேலை எழும்பி வரப்பண்ணி கேட்ட நபர் சவுல் தான் என்று உறுதி செய்துக் கொண்டு ஏன் என்னை மோசம் போக்கினீர் என்றாள். ஏனென்றால் அவள் காலத்தில் இராஜாவாக சவுல் இருந்தான். தீர்க்கதரிசியாக சாமுவேல் இருந்தான் ஆதலால் தீர்த்ததரிசியாகிய சாமுவேலை அழைத்தது இராஜாவாகிய சவுலாகத்தான் இருக்கவேண்டும் என உறுதி செய்தாள். இப்பொழுது அவள் தன் ஜீவனுக்கு பயப்பட்டாள். ஏனென்றால் அஞ்சனம் பார்க்கிறவர்களையும், குறி சொல்லுகிறவர்களையும் சவுல் துறத்திவிட்டிருந்தான்.

69. இங்கு கர்த்தர் அந்த ஸ்திரீ அஞ்சனம் பார்க்கவும், குறி சொல்லவும் வாய்ப்பு கொடுக்காது, அவளுக்கு வழியை திறந்து கொடுக்காது, அதை தடைசெய்து, உண்மையான / நிஜமான சாமுவேலையே

**தோன்றச்செய்தார். சாமுவேலும் சவுலும் ஒருவரை ஒருவர் முகமுகமாக சந்திக்க, சம்பாஷிக்க கர்த்தர் வாசல்களை திறந்துக் கொடுத்தார். சவுல் மாமிச சரீரத்தில் இருந்தான். சாமுவேல் தன் ஆவிக்குரிய சரீரத்தில் இருந்தான். ஆனாலும் சவுலும் சாமுவேலும் தங்கள் தங்கள் தோற்றத்தைக் கொண்டு ஒருவரை ஒருவர் அடையாளம் கண்டுக்கொண்டனர். அந்த அஞ்சனம் பார்க்கும் ஸ்திரீயும் சாமுவேலும் ஒருவருக்கொருவர் இடைபடவே இல்லை. சாமுவேல் அவளை கண்டுக் கொள்ளவே இல்லை. சாமுவேல் உண்மையான / நிஜமான நபராக இருந்ததால், அந்த அஞ்சனம் பார்க்கும் ஸ்திரீயை புறக்கணித்து, சவுலுடன் இடைப்பட ஆரம்பித்தான். அவன் அஞ்சனம் பார்க்கும் ஸ்திரீயிடம் இடைபடவே இல்லை. சாமுவேல் பிசாசின் வஞ்சிக்கும் தோற்றமுள்ள நபராக இருந்திருப்பானாயின், சவுலிடம் இடைபடாமல் இந்த அஞ்சனம் பார்க்கும் ஸ்திரீயோடே இடைபட்டிருப்பான். அவள் ஒரு மீடியமாக இருந்து செயல்பட்டிருப்பாள். மேலும் சாமுவேல் உண்மையான / நிஜமான நபராக இருந்ததினால், நீ என்னை எழும்பிவர பண்ணி, நீ என்னை கலைத்தது என்ன? (1 சாமு. 28 : 15) என சவுலை கேட்டான். சாமுவேல் பிசாசின் ஆவியாக இருந்திருப்பானாயின் அவன் அந்த ஸ்திரீயை நோக்கி நீர் என்னை எழும்பி வர பண்ணினதென்ன என்று கேட்டிருப்பான். இங்கு சாமுவேல் உண்மையான / நிஜமான நபராக இருப்பதால் தான் மீடியம் தன்னோடு இடைபட எந்த வாய்ப்பும் கொடுக்கவில்லை. சுருக்கமாக சொல்லப்போனால் அங்கு அஞ்சனம் பார்த்தலும், குறி சொல்லுதலும் நடைபெறவே இல்லை. தேவன் அதை தடைசெய்து சாமுவேலும் சவுலும் ஒருவரையொருவர் சந்திக்க, பேச, சவுல் தேவனுடைய வார்த்தையை சவுலுக்கு தீர்க்கதரிசனமாக கூற வழியை திறந்துக் கொடுத்தார்.**

70. இப்பொழுது சவுல் அந்த ஸ்திரீயை பார்த்து நீ காண்கிறது என்ன என்று கேட்கிறான். அதற்கு அவள் தேவர்கள் பூமிக்குள்ளிருந்து ஏறி வருகிறதை காண்கிறேன் என்கிறாள். அவள் கண்ட அந்த தேவர்கள் யார்? தியானியுங்கள் யோவான். 10 : 33-35, யாத்திராகமம் 4 : 15,16, சங்கீதம் 82 : 6. தேவவசனத்தை பெற்றுக்கொண்டவர்கள் தேவர்கள். ஆம் சாமுவேல் தேவ வசனத்தைப்பெற்ற ஒரு தேவனாக இருந்தான். தேவனுடைய வார்த்தை அவனிடத்தில் இருந்தது. அவன் ஒரு தீர்க்கதரிசி. ஆதலால் தான் அந்த ஸ்திரீ தேவர்கள் பூமிக்குள்ளிருந்து, அதாவது பரதீசிலிருந்து சாமுவேல் ஏறி வருகிறதை காண்கிறேன் என்று கூறினாள். இந்த சமயத்தில் சாமுவேல் பரலோகத்தில் இல்லை. அவன் பூமிக்குள்ளிருந்த பரதேசீலிருந்தான். ஆதலால் தான் பூமிக்குள்ளிருந்து ஏறி வந்தான். இயேசு கிறிஸ்துவின் ரத்தம் சிந்தப்படும் முன் மரித்த பரிசுத்தவான்களின் சரீரம் கல்லறைக்கு சென்றது. ஆவி தன்னை தந்த தேவனிடத்திற்கு சென்றது. ஆத்துமா பூமிக்குள் இருக்கும் பரதீசுக்கு சென்றது. ஆத்துமா தான் அவன். ஆவியின் தன்மைதான் ஆத்துமா.சாமுவேல் எழும்பி வந்தபோது தேவனிடத்திலிருந்து ஆவி அவன் ஆத்துமாவுக்குள் வர, அவன் ஆவிக்குரிய சரீரத்தில் (மாமிசம் மற்றும் இரத்தம் இல்லாத சரீரம் / தியாப்பெனி சரீரம்) வெளிப்பட்டான்.

71. இயேசுவை சிலுவையில் அடித்த போது அவருடன் இரு குற்றவாளிகள் இரு சிலுவைகளில் அடிக்கப்பட்டனர். ஒரு குற்றவாளி இயேசுவை நோக்கி : ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும் போது அடியேனை நினைத்தருளும் என்றான். இயேசு அவனை நோக்கி : இன்றைக்கு நீ என்னுடனே கூட பரதீசிலிருப்பாய் என்றார் (லூக். 23 : 39 - 43) இயேசு மரித்தவுடனே பரலேகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. அவர் இரவும் பகலும் மூன்று நாள் பூமியின் இருதயத்தில் இருக்கவேண்டியதிருந்தது (மத். 12 : 40) அவர் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு அதாவது அவர் உன்னதத்திற்கு ஏறி சிறைப்பட்டவர்களை சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார். ஏறினார் என்றதினாலே அவர் அதற்கு முன்னே பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார் என்று விளங்குகிறது அல்லவா? (எபே. 4 : 9,10) இயேசு தான் உயிர்த்தெழுந்தபோது, தன்னை மரியாளுக்கு வெளிப்படுத்தும்போது கூட மரியாளிடம் என்னை தொடாதே நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறி போகவில்லை என்றே கூறினார் (யோ. 20 : 17) அவர் மரித்த பிறகு பூமியின் கீழ் காவலில் உள்ள ஆத்மாக்களுக்கு பிரசங்கிக்க சென்றார். ஆம் அங்குதான் பரதீசும் இருந்தது.

72. மேலும் இங்கு இயேசு தம்முடைய சீஷர்களிடம் கூறியதை கவனியுங்கள். ஐசுவரியமுள்ள ஒரு மனிதன் இருந்தான் அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்து வந்தான். லாசரு என்னும் பேர் கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான். ஐசுவரியவானுடைய மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளினாலே தன் பசியை ஆற்ற ஆசையாய் இருந்தான். ஆனால் நாய்கள் வந்து அவர் பருக்களை நக்கிற்று. பின்பு இருவரும் மரித்தார்கள். தேவதூதர்கள் ஆபிரகாமுடைய மடியிலே அந்த தரித்திரனை கொண்டு விட்டார்கள். ஐசுவரிவானும் மரித்து அடக்கம் பண்ணபட்டான். பாதாளத்திலே வேதனைப்பட்டுக் கொண்டிருந்தான். ஆம் தரித்திரன் பரதீசுக்கு சென்று இளைப்பாறிக்கொண்டிருந்தான் ஆனால் ஐசுவரியவானோ பாதாளத்திலே வேதனைப் பட்டுக்கொண்டிருந்தான். பாருங்கள், ஐசுவரியவான் தன் கண்களை ஏறெடுத்து துரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசுருவையும் கண்டான். ஆக பாதளமும் பரதீசும் பூமிக்கு கீழ்தான் இருந்தது. ஆனால் இந்த இரண்டிற்கும் இடையில் பெரும் பிளப்பு உண்டாக்கப்பட்டிருந்தது. தியானியுங்கள் லூக். 16 : 19 - 31.

73. பூமிக்குள்ளிருந்து / பரதீசிலிருந்து ஏறி வந்தது சாமுவேல் என்பதை அவனுடைய ஆடைகள் மூலம், அவனது சரீர தோற்றங்கள் மூலம் சவுல் அடையாளம் கண்டுக் கொண்டு, தரை மட்டும் குனிந்து சாமுவேலை வணங்கினான். இப்பொழுது சவுலுக்கும் சாமுவேலுக்கும் இடையின் சம்பாஷனை நடக்கிறது. முடிவில் சாமுவேல் கர்த்தர் என்னைக் கொண்டு உனக்கு சொன்னபடியே செய்து முடித்தார். இராஜ்யத்தை உன் கையில் இருந்து பறித்து அதை உன் தோழனாகிய தாவீதுக்கு கொடுத்துவிட்டார் என்றான். தியானியுங்கள் 1 சாமு. 13 : 13,14 : 15 : 18-23 வசனங்கள்

74. **அடுத்து அன்று அந்த வேலையிலே அதே மணி நேரத்தில் தானே கர்த்தருடைய வார்த்தை தீர்க்கதரிசியாக சாமுவேலுக்கு வந்தது. அவன் சவுலை நோக்கி : நீ கர்த்தருடைய சொற்கேளாமலும் அமலேக்கின் மேல் அவருக்கு இருந்த கோபத்தின் உக்கிரகத்தை தீர்க்காமல் போன படியினால், கர்த்தர் இன்றைய தினம் (This day) உனக்கு இந்த பிரகாமாய் செய்தார் என்றான். மேலும் கர்த்தர் உன்னுடைய**

ஜனமாகிய இஸ்ரவேலரையும் பெலிஸ்தரின் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றான். மேலும் நாளைக்கு (Tomorrow) நீயும் உன் குமாரரும் என்னோடு இருப்பீர்கள் என கர்த்தருடைய வார்த்தையை தீர்க்கதரிசனமாக கூறினான். ஆம் சவுலும் அவன் குமாரர்களும் தன்னோடு நாளைய தினம் பூமியின் கீழ் உள்ள பரதீசிலிருப்பார்கள் என தீர்க்கதரிசனம் கூறினான் (1 சாமு. 28 : 18, 19) அவ்வாறகவே அது நிகழ்ந்தது. சவுலும் அவன் குமாரரும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டார்கள். கர்த்தரிடத்திலிருந்து சாத்தான் மேற்கண்டவாறு ஒரு தீர்க்கதரிசன செய்தியை பெற்று அதை சவுலுக்கு கூற முடியுமா? ஐயா, கூற முடியாது. சாத்தானும் தீர்க்கதரிசனம் / அதாவது கர்த்தருடைய வார்த்தையை உரைக்க முடியுமா? முடியாது.

75. முடிவாக, சவுல் கர்த்தருடைய வார்த்தையை கைக்கொள்ளாமல், கர்த்தருக்கு செய்த தன் துரோகத்தின் நிமித்தம் அவன் கர்த்தரை தேடாமல் அஞ்சனம் பார்க்கிறவர்களை கேட்கும்படிக்கு தேடினதினிமித்தம் செத்துப் போனான். அதற்காக கர்த்தர் அவனைக் கொன்று இராஜ்யபாரத்தை ஈசாயின் குமாரனாகிய தாவீது வசமாய் திருப்பினார் (1 நாளா 10 : 13,14).ஆம் சவுல் அஞ்சனம் பார்க்கிறவர்களை நாடினபடியால் இறந்துபோனான். பாருங்கள் சவுல், எந்தோர் சென்று அங்கு அஞ்சனம் பார்க்கும் ஒரு பெண்ணிடம் : நீ அஞ்சனம் பார்த்து, எனக்கு குறி சொல்லி, நான் உன்னிடத்தில் சொல்லுகிறவனை எழும்பி வரச்செய் என்றான். (1சாமு 28 : 8) ஆக சவுல் அஞ்சனம் பார்க்கிறவர்களை கேட்கும்படிக்கு தேடினதிநிமித்தம் செத்துப்போனான். அவன் அஞ்சனம் பார்த்தனிமித்தம் செத்தப் போனான் என்று கூறப்படவில்லை அவன் அஞ்சனம் பார்க்கிறவளை தேடினதினிமித்தம் செத்துப்போனான் என்றே கூறப்பட்டுள்ளது. அஞ்சனம் பார்க்கிறவர்களை நாடி குறி செல்லுகிறவர்களை தேடாதிருங்கள். (லேவி 19 : 31) லேவி. 20 : 6-8ன் படி அஞ்சனம் பார்க்கிறவர்களையும், குறி சொல்லுகிறவர்களையும் நாடுவதே தவறு, தண்டனைக்குறியது. சவுல் உண்மையாகவே, தன் முழு இருதயத்தோடு அஞ்சனம் பார்க்க, குறி சொல்லை கேட்கச் சென்றான். அவனுடைய இருதயம் தேவனிடத்தில் செம்மையானதாக இல்லை. ஆதலால் அதற்குறிய தண்டனையை பெற்றான். ஆனால் அங்கு நடந்த காரியம் வித்தியாசமாக மாறியது. கர்த்தர் காரியங்களை மாற்றிப் போட்டார்.

76. சவுல் மற்றும் அவனுடைய மூன்று குமாரர்களின் மரணம் குறித்து 1 சாமு. 31 அதி, 2 சாமு 1 அதி மற்றும் 1 நாளா10 அதிகளில் நீங்கள் வாசிக்கலாம்.

77. இதைப்போன்று அல்ல, மாறாக சற்று வித்தியாசமான மற்றொரு சம்பவத்தை வேதவாக்கியங்களிலிருந்து உங்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். பிலேயாம் ஒரு தீர்க்கதரிசிதான். ஆனாலும் அவன் இருதயம் தேவனுக்கு முன்பாக செம்மையானதாக இல்லை. கூலிக்காக வஞ்சகத்திலே விரைந்தோடினான். இன்றும் நம் மத்தியிலே உள்ள பிரபலமான ஊழியக்காரர்கள் முற்றிலுமாக தங்களுக்கென்று சொத்து சுகங்களை சேர்ப்பதையே ஊழியத்தின் மையமாக கொண்டுள்ளார்கள். ஒரு புறம் ஊழியம் என்ற சொல். மறுபுறம் பணம் சம்பாத்தியம். பிலேயாம் தகாதவழியில் பணம் சம்பாதிக்க நினைத்தான். இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்கு பிரியம் என்று அவன் அறிந்தும் தன் உள்ளத்தில் அவர்களை சபிக்க நினைத்தான். கர்த்தர் அவனை தம்முடைய மூலசித்தத்தின் கீழ் (Original Will) அனுமதிக்காமல், அனுமதிக்கும் சித்தத்தின் கீழ் (Permissive Will) அனுமதித்து, ஆனாலும் அவன் இருதயத்தின் வாஞ்சை நிறைவேறாதபடி தடுத்து, தம்முடைய சித்தத்தை நிறைவேற்றினார். தியானியுங்கள் எண் 23 அதி மற்றும் யோசுவா 24 : 9, 10 வசனங்கள். பின் கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்டபடியே இஸ்ரவேலர் மீதியானாருடன் யுத்தம் பண்ணி, புருஷர்கள் யாவரையும் கொன்றுப் போட்டார்கள். அத்துடன் பேயோரின் குமாரனாகிய பிலேயாமையும் பட்டயத்தினாலே கொன்றுப் போட்டார்கள். (எண். 31 : 7, 8)

78. பாருங்கள், பிலேயாம் ஒரு தீர்க்கதரிசி, தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக இஸ்ரவேல் ஜனங்களை பொருளாசையினால் சபிக்க நினைத்தான். கர்த்தர் வேண்டாம் என்றார். மீண்டும் அவரிடம் சென்றான். அவர் நீர் போ என்று சொல்லி அவனை அனுமதித்தார். முடிவில் கர்த்தர் அவனுடைய இருதயத்தின் எண்ணங்களை வாய்க்க செய்யப்பண்ணாமல், அவன் கொலை செய்யப்பட அனுமதித்தார்.

79. அவ்வாறாகவே இராஜாவாகிய சவுலும் அஞ்சனம் பார்க்க சென்றான். கர்த்தர் அவனை அஞ்சனம் பார்க்க, குறிசொல்லை கேட்க அனுமதிக்கவில்லை. ஆனாலும் அவன் மனபூர்வமாக அஞ்சனம் பார்க்க சென்றதற்காக அவன் கொலை செய்யப்பட ஒப்புக்கொடுத்தார்.

80. இப்பொழுது டாக்டர். M.S. வசந்தகுமார் அவர்களின் ஆராய்ச்சி கட்டுரையின்படி **நாளைக்கு நீயும் உன் குமாரர்களும் என்னோடிருப்பார்கள்** (1 சாமு 28 : 19) என பிசாசு தீர்க்கதரிசனமாக தேவனுடைய வார்த்தையை கூறமுடியுமா? முடியாது. மேலும் பிசாசின் இருப்பிடத்தில் தானோ சவுலும் அவன் குமாரர்களாகிய யோனத்தானும், அபினதாபும், மல்கிசூவாவும்? இது எனக்கு அபத்தமாக தோன்றுகிறது. உங்களுக்கு எப்படி? யோனத்தானுக்கே இந்த நிலையென்றால் பின் டாக்டர். M.S. வசந்தகுமார் நிலை என்ன? நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். என்னை பொறுத்த அளவில் தான் என்ன எழுதுகிறோம் என்று சிந்தியாமல் டாக்டர் எதை எதையோ எழுதுகிறார். அதற்கு ஆராய்ச்சி கட்டுரை என்று மற்றொரு டாக்டர் சான்றிதழ் கொடுக்கிறார். இருவரும் ஒரு மனப்பட்டு சத்தியத்திற்கு விரோதமாக பொய்களை பிணைக்கிறார்கள்.

81. சவுல் கர்த்தரால் அபிஷேகம் பண்ணபட்டவன். ஆனால் அந்த அபிஷேகம் அவனிடமிருந்து விலகியதேயன்றி அவன் தன் ஆத்துமாவை இழந்து போகவில்லை. ஆதலால்தான் சாமுவேல் கர்த்தருடைய வார்த்தையை கொண்டு தீர்க்கதரிசனமாக நாளைக்கு நீயும் உன் குமாரர்களும் என்னோடிருப்பீர்கள் என்றான். அதாவது என்னுடன் பூமியின் கீழ் உள் பரதீசிலிருப்பீர்கள் என்றான். சவுலின் மூன்று குமாரர்களும் கர்த்தருக்கு விரோதமாக தீமை செய்ததாக வேதவாக்கியங்களில் கூறப்படவில்லை. ஆதலால் அவர்கள் சாத்தானோடிருக்க/பாதாளத்திலிருக்க எந்தவிதமான முகாந்தரங்களும் இல்லை.

82. முடிவாக டாக்டர் M.S. வசந்தகுமார் அவர்களுடைய இந்த ஆராய்சி கட்டுரையின் உபதேசம் எல்லா கிறிஸ்தவர்களும் அறிந்திருக்க வேண்டிய ஒரு முக்கியமான செய்தியாக தெரியவில்லை. டாக்டர் புஷ்பராஜ் சார்ந்துள்ள ஸ்தாபன சபைகளுக்கு அது முக்கியமாக செய்தியாக இருக்கலாம். ஆனால் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு அது பரத்திலிருந்து இறங்கி வராத லௌகிக சம்பந்தமான ஞானம்.

83. சமீப நாட்கள் ஒன்றில் சகோதரி காதரின் பாக்ஸ்டன் என்பவர்களின் தெய்வீக வெளிப்பாடாக எழுதிய **நரகத்தைப்பற்றிய ஒரு தெய்வீக வெளிப்பாடு** என்ற புத்தகத்தை தமிழில் மொழிப்பெயர்த்து **சாம் ஜெயத்துரை வெளியீடு** வெளியிட, அதில் ஒரு பிரதி என் கைக்கு சென்னையில் உள்ள என் சகோதரி வீட்டிற்கு சென்றிருந்த போது கிடைத்தது. அரசாங்க அலுவலர்கள் லஞ்சப்பணத்தை **அன்பளிப்பு** (Gift) என்கிறார்கள். அந்த பாணியில் இவர்கள் புத்தக விலையை **நன்கொடை** என்கிறார்கள். புத்தகவிலை ரூபாய் 20/- 1998 வெளியீடு. புத்தகங்கள், செய்தி, பாட்டு கேசட்கள் வெளியிடுவதில் கொள்ளை லாபம். எல்லாம் மாயையும் மனதுக்குச் சஞ்சலமுமாய் இருக்கிறது.

84. என் இல்லத்திற்கு வந்த பின், சமயம் கிடைத்த வேளையில் ஒரு சில பக்கங்களை படித்தேன். அதற்குமேல் எனக்கு மனமில்லை, நாட்டமில்லை. அந்த அம்மையார் எழுதும் காரியங்கள் எதுவும் வேதவாக்கியங்களோடு ஒத்துப்போகவில்லை. அனைத்தும் மனதை மயக்கி இழுக்கும் ஒரு ஆவியின் கற்பனையாகவே எனக்கு தோன்றியது. நான் வேதவாக்கியங்களில் இல்லாத எதையும் ஏற்றுக்கொள்வது கிடையாது. பாருங்கள் திருத்துவத்தை நான் ஏற்றுக் கொள்வது கிடையாது. பிதாகுமாரன் பரிசுத்த ஆவி என உச்சரித்து கொடுக்கப்படும் ஞானஸ்நானத்தை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். ஏனென்றால் இவைகளுக்கு வேதவாக்கியங்களில் ஆதாரங்கள் இல்லை.

85. பொதுவாக இந்த அம்மையாரைப்போன்று, அநேக அம்மையார்கள் **வெளிப்பாடு** என்ற பெயரில் நிறைய புத்தகங்கள் எழுதியுள்ளார்கள். ஆனால் ஒன்றை மாத்திரம் நான் அறிவேன். தேவனுடைய சாயலாய் இருகிற கிறிஸ்துவின் மகிமையின் சுவிஷேசத்தை பிரசங்கிக்க கர்த்தர் எந்த ஒரு பெண்ணையும் எடுத்து உபயோகித்ததாக வேதவாக்கியங்களில் எங்கும் ஆதாரங்கள் இல்லை. பாருங்கள் இது தேவனுடைய சாயலாய் இருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷம் (2 கொரி 4 : 4) இதை பிரசங்கிக்க தேவன், புருஷனானவன் தேவனுடைய சாயலும் மகிமையுமாய் இருக்கிறபடியினால் அவனையே எடுத்து உபயோகிக்கிறார். இதில் அவர் மாறுவது கிடையாது. ஏனென்றால் ஸ்திரீ புருஷனிலிருந்து தோன்றினவள். புருஷனுக்காக சிருஷ்டிக்கப்பட்டவள். புருஷனுடைய மகிமையாய் இருக்கிறாள்.(1கொரி 11 : 7,8,9) ஒரு ஸ்திரீ தன் புருஷனுக்கு எந்த காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டியவள். மனைவிக்கு புருஷன் தலையாய் இருக்கிறான். (எபே 5 : 23, 24) இதினிமித்தமாக பெண்கள் ஆண்கள் மீது அதிகாரம் செலுத்த முடியாது. ஆனால் இராஜாவின் வார்த்தை எங்கோ அங்கே அதிகாரம் உண்டு (பிர. 8 : 4) சுவிசேஷத்தை பிரசங்கிக்கையில் இதைச் செய், இதை செய்யாதே என்று அதிகாரங்களை செலுத்தவேண்டியது உள்ளது. இந்த அதிகாரத்தை பெண்கள் ஆண்கள் மீது செலுத்த முடியாது. இக்காரணம் கொண்டுதான் கர்த்தர் தம்முடைய சுவிசேஷத்தை எந்த வகையிலும் பிரசங்கிக்க பெண்களை அனுமதிப்பதில்லை. ஆக இந்த அம்மையாரின் வெளிப்பாடுகளுக்கும், இவர்களது அழைப்புக்கும் வேதவாக்கியங்களில் ஆதாரங்கள் கிடையாது. ஆதலால் இப்படிப்பட்ட சாக்கடை சரக்குகளை விலைகொடுத்து வாங்கி கர்த்தர் உங்களுக்கு கொடுத்த அவருடைய பணத்தை வீணாக்காதீர்கள்.

86. தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட ஊழியகாரிகளுக்கு பஞ்சமில்லை.இவர்கள் பலுகிப்பெருக காரணங்கள் என்ன?
அ. வேத வாக்கியங்கள் மீது மக்களுக்கு ஆர்வமில்லை. அதை தியானிப்பது இல்லை. ஆராய்ந்து பார்ப்பதில்லை ஏனென்றால் இது சத்தியத்திற்கு செவியை விலக்கி கட்டு கதைகளுக்கு சாய்ந்து போகும் காலம் (2 தீமோ 4 : 4).
ஆ. இது சத்தியத்தை விட்டு விலகி மனுஷர்களுடைய கற்பனைகளுக்கு செவி கொடுக்கும் காலமாய் இருக்கிறது. (தீத். 1 : 13).
இ. இது இழிவான ஆதாயத்திற்காக தகாதவைகளை உபதேசித்து, முழு குடும்பங்களையும் கவிழ்த்துப் போடும் காலமாய் இருக்கிறது (தீத். 1 : 11)
ஈ. இது வீட்டில் தரித்திருக்க வேண்டியவள் (தீத் 1 : 5) தொழிற்கூடங்களையும், வியாபார அலுவலகங்களையும் நாடி தேடி ஓடி அலையும், சோம்பலுள்ளவர்களாய் வீடு வீடாக திரியும் காலமாய் இருக்கிறது.
உ. இது தன் சொந்த புருஷர்களுக்கு கீழ்படியாமல், தன் பிள்ளைகளிடத்தில் அன்பு கூறாமல், தன்னை முற்றிலுமாக வேறொருவனுடைய பணிக்கு அற்பணித்து, தன் குழந்தைகளுக்கு முழுநேர தாயாக இல்லாமல் பகுதி நேர தாயாக இருக்கும் காலமாய் இருக்கிறது (தீத். 2 : 4,5)
ஊ. இது தேவபக்தியின் வேஷத்தை தரித்து அதன் பெலனை மறுதலிக்கிறவர்களுடைய காலமாய் இருக்கிறது (2 தீமோ. 3 : 5)
எ. இது பாவங்களால் நிறைந்து, பற்பல இச்சைகளினால் இழுப்புண்டு, எப்போதும் கற்றாலும் ஒரு போதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாய் இருக்கிற பெண் பிள்ளைகளை தேவபக்தியின் வேஷத்தை தரித்த ஊழியர்கள் வசப்படுத்திக்கொள்ளும் காலமாய் இருக்கிறது (2 தீமோ 3 : 5 -7)

87. கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே இப்படிபட்ட வேதஆராய்ச்சி, தெய்வீக வெளிப்பாடு போன்றவைகளை விட்டு விலகுங்கள். கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்படியாத பெண் பிரசங்கிகளை புறக்கணியுங்கள். அவள் பிசாசு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்கள் ஆவியுடனே கூட இருப்பாராக. கிருபை உங்களோடிருப்பதாக. ஆமென்

கிறிஸ்துவின் அன்பில்
**சகோ. காலேப் யோசுவா**

ஏப்ரல் / 2009